விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 24
ஒலி 188 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 10 ஞாயிற்றுக்கிழமை (25.06.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## கனேடியப் பிரதமருக்கு எதிராக வவுனியாவில் கவனயீர்ப்புப் போராட்டம்



19

## யாழ்.பல்கலைக்கழகத்தில் மறைமுக சிங்கள மயமாக்கல்

### மாணவர் ஒன்றியம் பீடாதிபதிகளுக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் மறைமுகமான சிங்கள மயமாக்கல் செயற்பாடுகள் தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கடிதமொன்றை எழுதியுள்ளது.

துறைத்தலைவர்கள் பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் ஊடாக பல்கலைக்கழக பீடாதிபதிகளுக்கு அக்கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில், எமது யாழ்ப்பாணப் பல்கலைக் 19

## சிறுவர்களிடையே வேகமாக பரவும் வைரஸ் காய்ச்சல்

03ஆம் பக்கம் பார்க்க

# மரணப் படுக்கையில் நாட்டு மக்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் எச்சரிக்கை



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் தலைமையிலான அரசாங்கம் முழு நாட்டையும் ஏமாற்றி நாட்டு மக்களை மரணப் படுக்கைக்குள் கொண்டு சென்று கொண்டிருக்கிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எச்சரித்துள்ளார். (02ஆம் பக்கம பார்க்க)

## புங்குடுதீவு கண்ணகி அம்மனுக்கு கும்பாபிஷேகம்

(புங்குடுதீவு)

வரலாற்றுச் சிறப்புமிக்க புங்குடுதீவு கண்ணகி அம்மனின் மகா கும்பாபிஷேகம் இன்று நடைபெறவுள்ளது,

சப்தமி திதியும் உத்தர நட்சத்திரமும் 19

## இளவாலை பெரியவிளானில் மின்சாரம் தாக்கியதில் பெண் ஒருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெரிய விளான் பகுதியில் மின்சாரம் தாக்கி 60 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

வீட்டில் உள்ளவர்கள் வெளியே சென்றி 19

## பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோனுடன் ரணில் நட்பு ரீதியில் சந்திப்பு



(பாரிஸ்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனுக்கும் இடையில் நட்பு ரீதியான சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

பாரிஸில் நடைபெற்றுவரும் புதிய உலகளாவிய நிதி உடன்படிக்கைக்கான மாநாட்டின் இரண்டாம் நாள் அரச தலைவர் அமர்வின்போது இந்தச்சந்திப்பு நேற்று 19

## சமுர்த்தி பயனாளர்களை தெரிவு செய்வதில் முறைகேடு

### நாடு முழுவதும் வெவ்வேறு இடங்களில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் நலன்புரி திட்டத்திற்கு பயனாளர்கள் தெரிவு செய்யப்படுவதில் முறைகேடு இடம்பெற்றுள்ளதாக பயனாளர்கள் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

அரசாங்கத்தின் அஸ்வெசும நலன்புரி திட்டத்தில் பயன் பெறும் பயனாளர்கள் பற்றிய ஆவணங்கள் தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் சமுர்த்தி கொடுப்பனவை பெற்று வந்த பயனாளர்கள் இந்தத் திட்டத்தில் உள்வாங்கப்படவில்லை.

ஸ்திரமற்ற பொருளாதார நிலையினால் 02

## மன்னாரில் விபத்து; அம்புலன்ஸ் சாரதி பலி

(மன்னார்)

மன்னாரில் இடம்பெற்ற வீதி விபத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் சிறுதோப்பு பேசாலை, மன்னாரைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான மைக்கல் ஜெயரூபன் (வயது-49) என்பவரே உயிரிழந்தவராவார்.

மன்னார் வைத்தியசாலையில் அம்புலன்ஸ் சாரதியாக கடமையாற்றிவரும் அவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை 23ஆம் திகதி மாலை வேலை முடித்து பேசாலை நோக்கி 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேம்படி மகளிர் கல்லூரியின் அ.ச பொதுக்கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் அபிவிருத்திச் ச்ங்க வருடாந்த பொதுக் கூட்டம் இன்று 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள செல்வா கலையரங்கில் இடம்பெறும்.

பாடசாலை அதிபர் திருமதி இ.முத்துக்குமாரன் தலைமையில் இடம்பெறும். இப் பொதுக் கூட்டத்தில் சகல பெற்றோர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ம)

## மரணப்...

அவர் நேற்று விடுத்துள்ள விசேட ஊடக அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

"இந்நாட்டில் பதின்னான்கு சதவீதமாக இருந்த ஏழ்மை நிலை 31% ஆக அதிகரித்துள்ளதுடன். நாட்டின் மொத்த வறுமை 70 இலட்சத்தை தாண்டியுள்ளது.

மருத்துவமனைகளுக்குத் தேவையான மருந்துப் பற்றாக்குறையால் இலங்கை தற்போது மிக மோசமான சுகாதாரப் பேரிடரை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

மருந்துக்கான பற்றாக்குறை. மருந்தின் விலை உயர்வின் ஊடான மோசடி.ஊழல் என எல்லாவற்றையும் கருத்தில் கொள்ளும் போது. ஒட்டுமொத்த அரசாங்கமும் இந் நாட்டின் நோய்வாய்ப்பட்ட மக்களின் வாழ்க்கையுடனும் விளையாடிக்கொண்டிருக்கிறது.

நாட்டில் நிலவும் உண்மை நிலைவரத்தைப் புரிந்து கொள்ள ஒரு வெளிப்படைத் தன்மையான கணிப்பீட்டை நடத்துவதுதான் அரசாங்கம் முதலில் செய்திருக்க வேண்டும். மாறாக.அரசாங்கம் தொண்டைக்குள் போலி மருந்தை புகட்டி ஒட்டுமொத்த நாட்டையும் ஆபத்தில் தள்ளிவிட்டுள்ளது.

ஏழ்மையான மக்களுக்கு நிவாரணம் வழங்கவென அரசாங்கம் அஸ்வெசும எனும் கண்மூடித்தனமான நிவாரணத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளதோடு. இத்திட்டத்தின் மூலம் சுமார் 12 இலட்சம் பேருக்கு மூன்று ஆண்டுகளுக்கு நிவாரணம் வழங்கப்படும்.

நாட்டில் 70 இலட்சம் ஏழ்மையான மக்கள் இருக்கும் போது 12 இலட்சம் பேருக்கு நிவாரணம் வழங்குவதன் நோக்கம் என்னவென அரசாங்கத்திடம் கேள்வி எழுப்புவதோடு. எந்த கணக்கெடுப்பின். எந்தத் தரவுகளின் அடிப்படையில் இந்த 12 இலட்சம் பேர் தெரிவு செய்யப்பட்டனர் என்றும் அரசாங்கத்திடம் கேள்வி எழுப்புகிறோம்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதேச்சதிகாரமாக உரங்களைத் தடைசெய்து முழு நாட்டையும் பஞ்சத்தில் தள்ளியுள்ளதோடு. அவருக்குப் பின் இடைக்கால ஜனாதிபதியாக வந்த ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் முழு நாட்டையும் ஏமாற்றி முழு நாட்டு மக்களையும் மரணப் படுக்கைக்குக் கொண்டு சென்று கொண்டிருக்கிறது.

கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் நாட்டுக்கு செய்யப்போகும் பாரதூரமான அவலங்கள் குறித்து ஐக்கிய மக்கள் சக்தியாகிய நாம் முன்னரே நாட்டுக்கு எச்சரிக்கை விடுத்ததோடு. தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் முன்னைய அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு. எந்த விதத்திலும் இரண்டாம் பட்சமில்லை என ஆரம்பத்திலிருந்தே எச்சரித்து வருகின்றோம்.

எவ்வாறாயினும். நாட்டையும் நாட்டு மக்களையும் ஆபத்தில் ஆழ்த்துவது மட்டுமே அரசாங்கத்தின் ஒரே விருப்பமாக அமைந்திருப்பதோடு. அவ்வாறான நோக்கம் இல்லாமல் இருப்பதாக இருந்தால் மக்கள் மீது இவ்வளவு அழுத்தத்தை பிரயோகிக்க அரசாங்கம் எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது என்றார். (ம-7)

## லண்டனில் ரணில் தமிழரைப் பற்றி பேசியது பொய்

### முன்னாள் எம்.பி சரவணபவன்

(வட்டுக்கோட்டை)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க லண்டனில் பாரிய பொய்யினைப் பேசியுள்ளார். அவர் தமிழர்கள் பற்றி பேசியதெல்லாம் உண்மைக்குப் புறம்பானது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்தார்.

நேற்று வட்டுக்கோட்டை தொகுதி தமிழரசுக்கட்சி அலுவலகத்தில் சிறுவர்கழக பயிற்சி பட்டறை ஒன்றில் விருந்தினராக கலந்து சிறப்பித்த பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

ரணில் விக்கிரமசிங்க லண்டனில் பாரிய பொய்யினை பேசியுள்ளார். இது தொடர்பில் பலர் தற்போது கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர் தமிழர்கள் பற்றி பேசியதெல்லாம் உண்மைக்கு புறம்பானது. போராட்டக் காலங்களிலும் இவ்வாறே வெளிநாடுகளில் நடந்தது.

முன்பு இந்த வளர்முக நாடுகளுக்கு கூட்டங்கள் பிரான்சில் நடப்பது வழமை அங்கே பல கண்துடைப்புகள் இந்த சிங்கள அரச தலைவர்களால் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது. அதன் பின் அவர்கள் நாடுகளுக்குச் செல்கின்ற பொழுது ஏனைய நாட்டினுடைய தூதுவர்களுக்கு இந்த செய்திகள் போய்ச்சேரும் இதன் மூலம் தமக்கு தேவையான உதவிகளை பெற்றுக் கொண்டு இங்கு வந்து தலைகீழாக நடப்பர். இதை நான் என்னுடைய காலத்தில் கண்ட உண்மை இது ஒரு வரலாற்று உண்மை.

அன்று அவர்கள் வெளிநாடுகளில் போய் பேசுகின்ற பொழுது டிஜிட்டல் உலகம் இல்லை இன்று டிஜிட்டல் உலகம் இருக்கின்றது. ஜனாதிபதி எங்களை மேலும் ஏமாற்றிவிட முடியாது.

காணாமல்போனோர் அலுவலகம் மிக சிறப்பாக இயங்குகின்றது அது உண்மையற்றது என்று அனைவருக்கும் தெரியும். பாதிக்கப்பட்ட உறவுகளை மேலும் பாதிப்பிற்குள்ளாக்குவது போல இவருடைய கருத்துக்கள் அமைந்துள்ளன என்றார். (ம-7)

## சமுர்த்தி...

பாதிக்கப்பட்டுள்ளவர்கள் 04 பிரிவுகளின் கீழ் அரசாங்கத்தின் நலன்புரித் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதுடன். சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு பெயர்கள் வெளியிடப்பட்டிருந்தன.

எனினும். நலன்புரி திட்டத்தில் தகுதியானவர்கள் உள்வாங்கப்படவில்லை என தெரிவித்து மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதேச செயலகம் முன்பாக ஒன்றுகூடிய மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதனிடையே. அரசாங்கத்தின் நலன்புரி திட்டத்தில் உள்வாங்கப்படாத பொதுமக்கள் திருகோணமலையில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை பிரதேச செயலகத்திற்கு முன்பாக ஒன்று கூடிய மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதனிடையே. மன்னாரில் அரசாங்கத்தின் நலன்புரித் திட்டத்தில் உள்வாங்கப்படாத மக்கள் மூன்றாவது நாளாகவும் நேற்று எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக. மன்னார் - தலைமன்னார் வீதியை மறித்து இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர். சில உறுப்பினர்களுடன் மாவட்ட செயலாளர் கலந்துரையாடியதையடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

வத்தளை பிரதேச செயலகத்திற்கு முன்பாகவும் பொதுமக்கள் நேற்று எதிர்ப்பில் ஈடுபட்டனர். அங்கிருந்த சிலருக்கு கலந்துரையாடலொன்றுக்கு சந்தர்ப்பம் கிடைத்தாலும் தீர்வு கிடைக்கவில்லை.

மாத்தறை - காலி பிரதான வீதியின் வெலிகம பிரதேச செயலகத்திற்கு முன்பாகவுள்ள வீதியை மறித்து ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. (ம-7)


ஓராம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
28 . 04 . 2001



மறைவு
05 . 07 . 2022

அமரர் பவானந்தன் கஜேந்திரன்

( ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவன் )

திதி: சப்தமி வளர்பிறை

கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப்
போனாலும் எங்கள் முன்னே
உங்கள் முகம் எந்நாளும் உயிர்வாழும்
மண்ணைவிட்டு மறைந்த நீங்கள் விண்
நோக்கிச் சென்று ஓராண்டு சென்றாலும்
கண்ணைவிட்டு மறையாது உங்கள் நினைவுகள்
உங்கள் ஆத்மா சாந்திபெற வேண்டுகிறோம்.

குறிப்பு : 25.06.2023 இன்று நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம். இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

ஆத்தியடி,
புலோலி மத்தி, பருத்தித்துறை. (C-6813)

குடும்பத்தினர்
076 940 4031



Hybrid International Hub (pvt) Ltd Jaffna

இந்தியா விசா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான tour விசாக்கள் தேவைப்படுபவர்கள் தொடர்பு கொள்ளுங்கள். (C-6806)

Hybrid International Hub (pvt) Ltd, Jaffna
076 250 0098, 021 222 1265



மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1985 சுவாதி, கிரகபாவம் 24, அரச தொழில் புரியும் மணமகனுக்கு அரச தொழில் புரியும் மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (16080)

077 525 9567



வேலையாள் தேவை

எமது கால்நடை உற்பத்தி விற்பனை நிலையத்திற்கு Light vehicle (Auto Licence) உள்ள ஆண் வேலையாள் தேவை.

075 258 9665
077 851 1265
JAFFNA EGG CENTER





கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினரும் மாகாண கட்டடங்கள் திணைக்கள முல்லைத்தீவு நிறைவேற்றுப் பொறியியலாளர் பணிமனையின் தொழில்நுட்ப உத்தியோகத்தருமாகிய **திரு.து.பிரதீப்** அவர்களின் அன்புத் தந்தை

அமரர் **கதிரவேலு துரைராஜா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கம்
வட மாகாணம்.
(16081)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை - இந்திய உறவை மேலும் வலுப்படுத்த நடவடிக்கை

## உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே

(கொழும்பு)

இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் ஒத்துழைப்புக்களை மேம்படுத்துவதற்கான உத்தேச திட்டம் தொடர்பில் பிரதமர் தினேஸ்குணவர்தன மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோருக்கிடையில் பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது.



அலரிமாளிகையில் பிரதமர் மற்றும் இந்திய உயர்ஸ்தானிகருக்கிடை யில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையில் இரு நாடுகளுக்கும் இடையிலான விமான சேவைகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என இந்திய உயர்ஸ்தானிகர் இதன் போது தெரிவித்துள்ளார்.

பொதுத்துறை மற்றும் தனியார் விமான நிறுவனங்கள் இலங்கையில் விமான சேவைகளை முன்னெடுக்க தயாராகவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

டிஜிட்டல் மயமாக்கல், வலுசக்தி மற்றும் விவசாயம் போன்ற துறைகளில் இந்திய முதலீடுகளை அதிகரிக்க வேண்டும் என்று பிரதமர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாட்டை எட்டுவதற்கு உரிய நேரத்தில் நிதி உத்தரவாதத்தை வழங்கியமைக்கு இந்திய அரசாங்கத்துக்கு நன்றி தெரிவிப்பதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார். (4)

# சிறுவர்களிடையே வேகமாக பரவும் வைரஸ் காய்ச்சல்

(கொழும்பு)

சிறுவர்களிடையே டெங்கு நோய் மற்றும் இன்புளுவன்சா ஏ மற்றும் பி வைரஸ்கள் வேகமாக பரவி வருவதாக சிறுவர் வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

மேலும், குழந்தைகளின் ஆரோக்கியத்தில் பெற்றோர்கள் தனிக்கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

குழந்தைகளுக்கு காய்ச்சல் இருந்தால் பாடசாலைகள் அல்லது பகல்நேர பராமரிப்பு மையங்களுக்கு அனுப்ப வேண்டாம் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (4)

# சீமெந்து விலையை மேலும் குறைக்க முடிவு

(கொழும்பு)

நாட்டில் முக்கிய நிர்மாணத்துறை பங்குதாரர்களுடனான சந்திப்பின் பின்னர், தற்போதைய சந்தை விலையை விட குறைந்த விலையில் சீமெந்து இறக்குமதி செய்வது தொடர்பாக இந்தியா மற்றும் பாகிஸ்தானின் நிறுவனங்களுடன் இலங்கை கலந்துரையாடி வருவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த இரண்டு மாதங்களில் ரூபாயின் பெறுமதி 20 வீதம் அதிகரித்திருந்த போதிலும், 50 கிலோ கிராம் சீமெந்து பக்கெட் ஒன்றின் விலை கடந்த மாதம் 150 ரூபா அல்லது 5.4 வீதத்தால் குறைவடைந்துள்ளது.

சீமெந்தின் விலை உயர்வானது கட்டுமானத் தொழிலை பாதித்துள்ளது மற்றும் சுமார் 100,000 கட்டுமான தொழிலாளர்கள் இந்த நடவடிக்கையால் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே மேற்கண்ட நடவடிக்கையினால் சீமெந்தின் விலையினை 400-500 ரூபாய் வரை குறைக்க முடியும் எனவும் அமைச்சர் இதன் போது தெரிவித்தார். (4)



சாவகச்சேரி ரி.பி. ஹன்ற் ஞாபகார்த்த ஓவியக்கூடத்தின் 5 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் ஆரம்ப பிரிவு மாணவர்களின் "துலங்கும் வர்ணங்கள்" கண்காட்சி நிகழ்வும் நேற்று சனிக்கிழமை ஓவியக்கூடத்தில் இடம்பெற்றது. (படம்- சுபேசன்)

# இலங்கைக்கு வருகை தந்த ஜப்பான் போர்க் கப்பல்



(கொழும்பு)

ஜப்பான் கடல்சார் தன்னியக்கப் படைக்கு சொந்தமான "இகாசுச்சி" என்ற கப்பல் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றிற்காக இலங்கை வந்தடைந்துள்ளது.

இலங்கையை நோக்கி கடந்த ஒரு வார காலத்துக்குள் மாத்திரம் மேற்குலக மற்றும் அண்டை நாடுகளில் இருந்து தொடர்ந்து கடற்படை கப்பல்கள் வருகை தந்த வண்ணம் உள்ளன.

கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த இந்த போர்க்கப்பல் 150.5 மீற்றர் நீளமும், 207 தங்குமிடங்களும் கொண்டது.

கப்பல் இலங்கையில் தரித்து நிற்கும் காலத்தில் அதன் கடற்படை அணி நாட்டின் பல பகுதிகளுக்கு சென்று இலங்கையின் முக்கிய இடங்களை பார்வையிடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (4)

# 2010 இல் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம்; 21 பல்கலை மாணவர்களும் விடுதலை

(கொழும்பு)

கொழும்பில் கடந்த 2010 ஆம் ஆண்டு ஒக்டோபர் 14ஆம் திகதி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்து, சட்ட விரோதமாக ஒன்றுகூடியமை, பொலிஸாருக்கு காயங்களை ஏற்படுத்தியமை மற்றும் பொது சொத்துச் சட்டத்தின் கீழ் சுமத்தப்பட்ட 29 குற்றச்சாட்டுகளில் இருந்து முன்னாள் பல்கலைக்கழக மாணவர் செயற்பாட்டாளர்கள் 21 பேரை கொழும்பு மேல் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

அன்றைய உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசா நாயக்கவை கொச்சைப்படுத்திய குற்றச்சாட்டில் சிறைத் தண்டனை பெற்ற பேராதனை பல்கலைக்கழக மாணவர் செயற்பாட்டாளர்கள் குழுவொன்றை விடுவிக்க கோரி அனைத்து பல்கலைக்கழக மாணவர் சம்மேளனம், கல்வி அமைச்சுக்கு வெளியில் இந்த போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

இதன் போது பல்கலைக்கழக மாணவர் சம்மேளனத்தின் அப்போதைய அழைப்பாளர் உதுல் பிரேமரத்ன உட்பட 21 பல்கலைக்கழக மாணவர்களை பொலிஸார் கைது செய்தனர்.

அத்துடன் போராட்டத்தை செய்தியாக்க வந்த பல ஊடகவியலாளர்களும் பொலிஸாரால் கொடூரமாக தாக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து மாணவர்களின் போராட்டத்தை செய்தியாக்க சென்றிருந்த ஊடகவியலாளர்கள் குழுவை தாக்கிய பொலிஸ் அதிகாரிகள் மீது உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச ஊடகவியலாளர்கள் கூட்டமைப்பும் கோரிக்கை விடுத்திருந்தது.

இந்த நிலையிலேயே கைது செய்யப்பட்டவர்கள் மீது கொழும்பு மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரினால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

எனினும் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக போதிய சாட்சியங்கள் இல்லாததை கருத்தில் கொண்டு, அனைத்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் அவர்களை விடுவிக்க மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்த தீர்மானித்துள்ளார். (4)

# குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழப்பு

(கொழும்பு)

எம்பிலிபிட்டிய பனாமுர, வெலிக்கடைய பிரதேசத்தில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சந்தேக நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பல துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய இவரைக் கைது செய்வதற்காக நேற்று அதிகாலை இந்த விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்டபதில் தாக்குதலில் 22 வயதுடைய சந்தேக நபர் சுட்டுக் கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மினுவாங்கொடை பெஸ்டியன் மாவத்தை மற்றும் அம்பலாங்கொடையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய முன்னாள் இராணுவவீரர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை எம்பிலிபிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட எறிபந்தாட்ட போட்டி முடிவுகள்


செம்பியன்பற்று


நெல்லியடி

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட எறிபந்தாட்ட போட்டியில் பெண்கள் பிரிவில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணியும் ஆண்கள் பிரிவில் செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க பாடசாலை மற்றும் நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றின.

இதன் இறுதியாட்டங்கள் கடந்த புதன்கிழமை கரவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. 17 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணியும் இரண்டாமிடத்தை நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் மூன்றாமிடத்தை வல்வை சிவகுரு வித்தியாலய அணியும் பெற்றன.

20 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணியும் இரண்டாமிடத்தை நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் மூன்றாமிடத்தை வல்வை மகளிர் கல்லூரி அணியும் 17 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க பாடசாலையும் இரண்டாமிடத்தை நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் மூன்றாமிடத்தை உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணியும் பெற்றன.

20 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் இரண்டாமிடத்தை உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணியும் மூன்றாமிடத்தை விக்கினேஸ்வரா கல்லூரி அணியும் பெற்றன. (4-6-90)


உடுப்பிட்டி


உடுப்பிட்டி



வலிகாமம் வலய பாடசாலைகளுக்கு இடையிலான கபடி போட்டியில் புனித ஹென்றியரசர் கல்லூரி, தொல்புரம் விக்னேஸ்வரா கல்லூரி, கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளை வென்று யா/பலாலி வடக்கு அ.த.க பாடசாலை17 வயதின் கீழ் ஆண்கள் அணி மாகாண மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது

# ஸ்கொட்லாந்து வெற்றி

ஒருநாள் உலகக் கிண்ண தகுதிச்சுற்று ஆட்டத்தில் நேற்று முன்தினம் ஐக்கிய அரபு அமீரகம் ஸ்கொட்லாந்து அணிகள் மோதின. டாஸ் வென்ற அமீரகம் அணி பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் பட்டிங் செய்த ஸ்கொட்லாந்து அணி 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 282 ரன்கள் எடுத்தது. அந்த அணியில் சிறப்பாக ஆடிய ரிச்சி பாரிங்டன் சதம் அடித்தார்.

அவர் 127 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அமீரகம் சார்பில் ஜுனைட் சித்திக் 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார். தொடர்ந்து 283 ரன்கள் இலக்குடன் களமிறங்கிய அமீரகம் ஸ்கெட்லாந்து அணியின் அபார பந்துவீச்சில் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தது.

இதனால் 35.3 ஓவர்களில் 171 ரன்கள் எடுத்து 10 விக்கெட்டுகளை இழந்து ஆட்டமிழந்தது.

இதனால் ஸ்கொட்லாந்து அணி 111 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2861

தர்சிகா | ஹரி | நிலா




கணவன்:- நாளைல இருந்து நீ தையல் வகுப்புக்குப் போக வேணாம்...

மனைவி:- என்னங்க திடீர்னு இப்படி சொல்லுறீங்க... சேர்த்து விட்டதே நீங்க தானே...

கணவன்:- நான் தான் சேர்த்து விட்டன். நீ பகலல்ல எல்லாம் தையல் மிஷின மிதிச்சிட்டு, இரவான தூக்கத்தில என்னைப் போட்டு மிதிக்கிறாய் அதுதான்.




சயந்தன் | ஆர்த்தி | ராம்










நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவற்றை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புகையிரத சேவை மறுசீரமைப்பு தொழிற்சங்கங்கள் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

புகையிரத திணைக்களம் இலாபமடைய வேண்டுமாயின் புகையிரத சேவையை அதிகார சபையாக மாற்றியமைக்க வேண்டும், புகையிரத சேவை மறுசீரமைக்கப்பட வேண்டும் என போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்ட கருத்துக்கு புகையிரத சேவை தொழிற்சங்கத்தினர் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

புகையிரத சேவையை அதிகார சபையாக மாற்றியமைக்கும் போது பொது பயணிகள் பாரிய அசௌகரியங்களை எதிர்கொள்வார்கள். இலாபமடையும் நோக்கத்துக்காக கட்டணம் சடுதியாக அதிகரிக்கப்படும். ஆகவே புகையிரத சேவையை அதிகார சபையாக மாற்றியமைக்கும் போது ஏற்படும் பாதிப்பை அரசாங்கம் மக்களுக்கு அறிவுறுத்த வேண்டும். மக்களின் விருப்பத்துக்கு அமையவே புகையிரத சேவை மறுசீரமைக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

புகையிரத சேவையை அதிகார சபையாக மாற்றியமைத்தால் நடுத்தர மக்கள் பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்வார்கள்.

பொதுப்போக்குவரத்து சேவையின் கட்டணம் உயர்வடைந்ததால் பெரும்பாலான பொது பயணிகள் தற்போது புகையிரத சேவையை பயன்படுத்துகிறார்கள்.


இவ்வாறான பின்னணியில் புகையிரத சேவையை அதிகார சபையாக்கினால் பொது பயணிகள் பாரிய அசௌகரியங்களை எதிர்கொள்வார்கள்.

புகையிரத சேவையை அதிகாரசபையால் மாற்றியமைக்கும் போது பொதுப்பயணிகள் எதிர்கொள்ளும் அசௌகரியங்கள், இழக்கப்படும் வரப்பிரசாதங்கள் ஆகியன தொடர்பில் வெளிப்படைத் தன்மையுடன் அரசாங்கம் மக்களுக்கு அறிவிக்க வேண்டும்.

மக்களின் விருப்பத்துக்கு அமையவே புகையிரத சேவை மறுசீரமைக்கப்பட வேண்டும் எனவும் தொழிற்சங்கத்தினர் போக்குவரத்து அமைச்சிடம் வலியுறுத்தியுள்ளனர். (4)

# நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் சீர்குலைந்தால் நாடு முன்னேறாது

## நிதி இராஜாங்க அமைச்சர்



(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் சீர்குலைந்தால் நாடு கடந்த வருடம் ஜூலை மாதம் இருந்த நிலைமைக்கு திரும்பும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ருவன்வெல்ல பிரதேசத்தில் நேற்று சனிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு ஆதரவு தெரிவிக்கப்போவதில்லை என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ள நிலையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (4)

# கப்பல் விபத்துக்கள் தொடர்பில் பரிந்துரை வழங்க ஆய்வுக்குழு

(கொழும்பு)

இலங்கைக் கடற்பகுதியில் இடம்பெற்ற நியூ டயமண்ட், எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் விபத்துக்கள் தொடர்பில் பரிந்துரைகளை வழங்க ஆய்வுக் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது.

இலங்கை கடற்பகுதியில் இடம்பெற்ற நியூ டயமண்ட் மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் விபத்துகள் தொடர்பான உண்மைகளை ஆராய்ந்து, தேவையான பரிந்துரைகளை வழங்க பாராளுமன்ற சிறப்புக் குழுவில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் விபத்து தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து விரிவான விசாரணைக்கு உரிய நிறுவனங்களிடம் சான்றுகள் பெறப்பட உள்ளன.

அமைச்சர் ரமேஷ் பத்திரன தலைமையிலான பாராளுமன்ற விசேட குழுவில் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படாமல் தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலான பரிந்துரைகளை அக்குழு முன்வைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, குழுவின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டிய பிரச்சினைகள் குறித்து பொது மக்களின் கருத்துக்களை பெறவும் நாளிதழ் விளம்பரங்களை வெளியிடவும் இரண்டு வார கால அவகாசம் வழங்கவும் முடிவு செய்யப்பட்டது.

இந்த குழு நாளை மறுதினம் 27 ஆம் திகதி மீண்டும் கூடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# ஆளும் தரப்பு எம்.பிக்களுக்கு அழைப்பு

(கொழும்பு)

ஆளுந்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் அடுத்த வாரம் கொழும்பில் தங்கியிருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில், எதிர்வரும் 28 ஆம் திகதி, ஜனாதிபதி செயலகத்தில், ஆளுந்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் விசேட கூட்டம் இடம்பெறவுள்ளது.

அந்தக் கூட்டத்தில், அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்கும் வகையில், இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், கொழும்பிலிருந்து வெளி இடங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (4)


## மணமகன் தேவை

1990. யாழ்.இந்து. பூராடம். Lecturer, மயிலிட்டி. பதிவு #9121. தரகர் கூலி இல்லை. பதிவுக்கட்டணம் மட்டுமே. www.EQMarriageService.com இணையவழி திருமண சேவை. அழையுங்கள் 076 664 9401. Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04. (c-2037)

## மணமகன் தேவை

1992. யாழ்.இந்து. அவிட்டம். Civil Engineer, தெல்லிப்பளை. பதிவு #9341. தரகர் கூலி இல்லை. பதிவுக்கட்டணம் மட்டுமே. www.EQMarriageService.com இணையவழி திருமண சேவை. அழையுங்கள் 076 664 9401. Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04. (c-2037)

## மணமகள் தேவை

1993. யாழ்.இந்து. அவிட்டம் Doctor, யாழ்ப்பாணம். பதிவு #9329. தரகர் கூலி இல்லை. பதிவுக்கட்டணம் மட்டுமே. www.EQMarriage Service.com இணையவழி திருமண சேவை. அழையுங்கள் 076 664 9401. Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04. (c-2037)


# இராசிபலன்

25.06.2023
ஆனி 10, ஞாயிற்றுக்கிழமை
சப்தமி முன்னிரவு 9.53 மணிவரை
பூரம் முற்பகல் 8.31 மணிவரை

சுபநேரம் -8.55-10.25 மணிவரை
இராகுகாலம்-4.25-5.55 மணிவரை
சித்தாமிர்தம், இரவு நடேசர் அபிஷேகம்

சந்திராஷ்டமம்-அவிட்டம்

வளவன்




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், மற்றவர்களின் மன நிலையை அறிந்து செயற்படுவீர்கள்.




காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், கூட்டு முயற்சிகள் கைகூடும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும்.




பணப்புழக்கம் அதிகமனாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.




குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும் வாய்ப்புண்டு.




பிள்ளைகளின் தேவையறிந்து செயற்படுவீர்கள், மனமகிழ்ச்சியோடு செயற்படும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.




புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.




புகழ் பெற்றவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஆர்வம் கூடும், குடும்பத்தில் குதூகலம் கூடும், போசன சுகமுண்டு.




கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு, பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள்.




நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும்.




பணத்தேவைகள் கடைசிநேரத்தில் பூர்த்தியாகும், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் கூடும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.




புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தொழில் வளர்ச்சி கூடும்.




உறவினர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாச் செல்வமும் உழைப்பின் பலனால் வந்தது.

## முகநூல் தரிசனம் 150

# தனியாகத் தீவில் சிக்கிய நபர்

கப்பல் ஒன்று கடலில் வழிதவறி செல்லும்போது புயலில் சிக்கி மூழ்கிவிடுகிறது. அதில் ஒருவன் மட்டும் எப்படியோ தப்பித்து அருகிலுள்ள தீவில் அவன் கரையேறுகிறான்.

"இறைவா இங்கிருந்து எப்படியாவது என்னை தப்பிக்க வைத்துவிடு.

ஏதாவது ஒரு ரூபத்தில் தனக்கு உதவிக்கரம் நீளும் என்று தினசரி எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாந்து விடுகிறான். எதுவும் உதவி கிடைத்தபாடில்லை. இப்படியே நாட்கள் ஓடுகின்றன.

தன்னை காத்துக்கொள்ள, தீவில் கிடைத்த பொருட்கள், மற்றும் கப்பலின் உடைந்த பாகங்கள் இவற்றை கொண்டு ஒரு சிறிய குடிசை ஒன்றை கட்டுகிறான். அதில் கரை ஒதுங்கிய கப்பலில் இருந்த தனது பொருட்கள் மற்றும் உடைமைகள் சிலவற்றை கொண்டு குடில் அமைத்து வாழ்ந்து வந்தான்.

இப்படியே சில நாட்கள் ஓடுகின்றன. இவன் பிரார்த்தனையை மட்டும் விடவில்லை. கடவுள் ஏதாவது ஒரு ரூபத்தில் நமக்கு நிச்சயம் உதவுவார் என்று தன்னை தேற்றிக் கொண்டான்.

ஒருநாள் இவன் உணவு தேடுவதற்காக வெளியே சென்றுவிட்டு திரும்புகையில், அவன் கண்ட காட்சி அவனை திடுக்கிட வைத்தது.

பட்ட காலிலே படும் என்பது போல எது நடக்கக் கூடாதோ அது நடந்துவிட்டது. இவன் தங்குவதுக் கென்று இருந்த ஒரே குடிசையும் வானுயர எழும்பிய புகையுடன் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது. குடிசைக்குள் இருந்த உடைமைகள் அனைத்தும் தீக்கிரையாகியிருந்தன. அதைப் பார்த்த இவன் அலறித் துடித்தான். எல்லாம் போய்விட்டது. இவனிடமிருந்த மிச்ச சொச்ச பொருட்களும் போய்விட்டன.

"இறைவா என்னைக் காப்பாற்றும்படி தானே உன்னை மன்றாடினேன். நீ என்னவென்றால் இருப்பவற்றையும் பறித்துக் கொண்டாயே. இது தான் உன் நீதியோ?" என்று கதறி அழுகிறான்.

மறுநாள் காலை ஒரு கப்பலின் சத்தம் இவனை எழுப்பியது. இவன் தீவை நோக்கி அது வந்து கொண்டிருந்தது.

"அப்பாடா நல்ல வேளை ஒரு வழியாக இங்கிருந்து தப்பித்தோம். யாரோ நம்மை காப்பாற்ற வருகிறார்கள்." என்று உற்சாகத்தில் துள்ளிக் குதித்தான்.

கப்பல் சிப்பந்திகள் இவனை, போட்டில் வந்து அழைத்து சென்றார்கள்.

தான் இங்கே தீவில் மாட்டிக்கொண்டிருப்பது எப்படி தெரியும் என்று அவர்களிடம் கேட்க, "தீவில் ஏதோ பற்றி எரிந்து புகை எழும்பியதை பார்த்தோம். யாரோ தீவில் கரை ஒதுங்கி காப்பாற்ற வேண்டி சிக்னல் கொடுக்கிறார்கள் என்று நினைத்தோம்" என்கிறார்கள் அவர்கள்.

அப்போது இறைவன் குடிசையை எரித்த காரணம் இவனுக்கு புரிந்தது. இறைவனுக்கு நன்றி சொன்னான்.

அந்த வழியில் கப்பல்கள் வருவதே மிக மிக அரிதான நிலையில், குடிசை மட்டும் தீப்பிடித்து எரியவில்லை என்றால் தன் நிலை என்னவாகியிருக்கும் என்று அவனுக்கு புரிந்தது. அவசரப்பட்டு இறைவனை நிந்தித்ததை, நினைத்து மனம் வருந்தினான்.

வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் நாம் இப்படித் தான் இறைவனை அவசரப்பட்டு தவறாக எடைபோட்டு விடுகிறோம்.

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# எதிர்வரும் நாட்களில் டெங்கு தீவிரமடையும் ஆபத்து!

## விசேட வைத்தியர் எச்சரிக்கை

(கொழும்பு)

இவ்வருடத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பை காண முடிவதாகவும் ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் 47,000 இற்கும் அதிகமான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்றும் உடலியல் நோய்கள் தொடர்பிலான விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்தார்.

எதிர்வரும் பருவகால மழைவீழ்ச்சியின் போது டெங்கு நோய் பரவல் அதிகரிக்கக்கூடும் என்பதால் சுற்றுச்சூழலை தூய்மையாக வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தையும் வைத்திய நிபுணர் சுட்டிக்காட்டினார்.

தற்போது வரையில் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே அதிகளவில் டெங்கு நோயாளர்கள் பதிவாகின்றனர் எனவும் அங்குள்ள சுகாதார மற்றும் பாதுகாப்பு துறையினருடன் இணைந்து கழிவுகளை அகற்றும் விசேட வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளதாகவும் ஆனந்த விஜேவிக்ரம சுட்டிக்காட்டினார்.

இந்நாட்களில் டெங்கு நோய் பரவலை கட்டுப்படுத்துவதற்காக சுகாதார அமைச்சின் தலையீட்டின் கீழ் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதே போல் டெங்கு ஒழிப்பு திட்டத்தினை அரச, தனியார் துறைகள் பொதுமக்களையும் ஒன்றிணைத்துக்கொண்டு முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்.

தொடர்ச்சியாக இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் பட்சத்தில் டெங்கு நோயினை கட்டுப்படுத்தும் இயலுமை காணப்படுகின்றது. எதிர்வரும் பருவகாலத்தை தொடர்ந்து டெங்கு நோய் பரவல் அதிகரிக்கக்கூடும்.

பொதுவாக ஜூலை மாதத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பை காண முடியும். அந்த வகையில் எதிர்வரும் நாட்களில் நோயாளர்கள் அதிகரிக்க கூடும் என்பதால் அனைத்து துறையினரும் அவதானத்துடன் செயற்பட வேண்டியது அவசியமாகும் எனவும் தெரிவித்தார். (4-6)

# உதயதாரகை பிறீமியர் லீக் இறுதியாட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் உதயதாரகை பிறீமியர் லீக் மென்பந்து போட்டியின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வட்டுக்கோட்டை வை. எம்.எச்.ஏ மைதானத்தில் தலைவர் ஆர்.டிசாந் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் வலம்புரிப் பத்திரிகை முகாமையாளர் மாவை.ந.கஜேந்திரன் மற்றும் வட்டுக்கோட்டை தெற்கு,மேற்கு ஜே/116 கிராம சேவையாளர் எஸ். சிவகுமார் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். (4-6)

# அரியாலை ஸ்ரீ மஹாமாரி அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.அரியாலை பிரப்பங்குளம் ஸ்ரீ மஹாமாரி அம்பாள் கோயில் நவகுண்ட பக்ஷ புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு எதிர்வரும் ஜூலை மாதம் 8 ஆம் திகதி சனிக்கிழமை எண்ணெய்க்காப்பு சாத்துதல் வைபவம் காலை 6 மணி முதல் மாலை 4 மணி வரை இடம் பெறும்.

மறுநாள் ஞாயிற்றுக் கிழமை காலை 8.42 மணி முதல் 10.42 மணி வரையுள்ள சுபவேளையில் மஹா கும்பாபிஷேகம் இடம் பெறவுள்ளது. (4-6)

# முதியவரை விபத்துக்குள்ளாக்கிய நபருக்கு தண்டப்பணம் விதிப்பு

(கரணவாய்)

வீதியால் நடந்து சென்ற முதியவரை விபத்துக்குள்ளாக்கிய நபருக்கு ஒரு லட்சம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் வல்லை முனியப்பர் ஆலயத்துக்கு அருகில் உள்ள 750 வீதியில் நடந்து சென்ற முதியவரை முச்சக்கரவண்டி மோதியதில் ஏற்பட்ட விபத்து தொடர்பில் நெல்லியடி பொலிஸாரால் வழக்கு பதியப்பட்டது.

குறித்த வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை நீதி மன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது விபத்துககுள்ளான முதியவருக்கு ஒரு லட்சம் ரூபாய் தண்டப்பணம் செலுத்துமாறு மன்று தீர்ப்பளித்தது. (4-6-60)

# பயிர்களை சேதப்படுத்திய கட்டாக்காலி மாடுகள் பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கிராம அலுவலர் ஜே/ 121 பிரிவில் கொக்குவில் கிழக்கு கமக்கார அமைப்பினால் பயிர்களை சேதப்படுத்திய மூன்று மாடுகள் பிடிக்கப்பட்டு பராமரிப்பில் உள்ளது.

உரியவர்கள் அடையாளம் காட்டி பெற்றுக் கொள்ளுமாறு நல்லூர் கமநல சேவைகள் நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஸ்ரீ.கோபிநாத் அறிவித்துள்ளார். (4-6)

# மலையக மக்களின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழில் கண்காட்சி



(யாழ்ப்பாணம்)

மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 ஆவது ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் கண்காட்சி நேற்று முன்தினம் ஆரம்பமானது. மலையக மக்களின் வாழ்வியல் சவால்களை வெளிப்படுத்தும் மலையக மக்களின் கலை வெளிப்பாடுகளாக "புறக்கணிக்கப்பட்ட மலைகள்" என்ற தலைப்பில் கிசோ குமாரின் புகைப்பட கண் காட்சியும், "தேயிலை சாயம்", எனும் தலைப்பில் மாற்றுக் கொள்கை களுக்கான நிலையத்தின் புகைப்படங்களின் கண்காட்சியும் இதில் உள்ளடக்கியுள்ளது.

குறித்த கண்காட்சி இன்று யாழில் உள்ள ரிம்மர் மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை இடம்பெறவுள்ளது. (4-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 403

Viber 076 636 3378



# சர்வதேசத்தினூடான நீதியையே தமிழினம் விரும்புகிறது




> இது தமிழினத்தின் உரிமைப் பிரச்சினை. தமிழினம் தனது பூர்வீக பூமியில் எந்த வித இடையூறுமின்றி நிம்மதியாக வாழ்வதற்கு விரும்புகிறது. அதைப் பெற்றுத்தர வல்ல அதிகாரம் சர்வதேசத்திடமே உண்டு.

தமிழினத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இன வன்மத்தின் விளைவு முள்ளிவாய்க்கால் மண்ணில் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர்.

பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என அரசாங்கம் விளக்கம் அளித்தாலும் அதில் மாண்டு போனது அப்பாவிப் பொது மக்கள் என்ற உண்மையை இலங்கை அரசு உணர்ந்திருந்த போதிலும் இலங்கை இராணுவத்தைப் பாதுகாக்கும் செயற்பாட்டில் மிகவும் தீவிரப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இராணுவத்தைப் பாதுகாக்க முற்படும் அரசுக்கு அங்கு கொன்றழிக்கப்பட்டவர்கள் இந் நாட்டின் குடிமக்கள் எனும் யதார்த்தம் புரியாமல் போனது ஏன் என்று தான் இன்னமும் புரியவில்லை.

போர் என்றால் உயிரிழப்புக்கள் ஏற்படத்தான் செய்யும் என்று இலங்கை அரசு தன்னிலை விளக்கம் அளித்தாலும் போரின் கண்ணியத்தன்மை இழக்கப்பட்டதற்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் நாம் என்பதும் புரியாமல் போய்விட்டது.

இறுதி யுத்தத்தில் இறந்தவர்கள் அனைவரும் பயங்கரவாதிகள் என முத்திரை குத்திவிடுவது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல.

தமிழினத்தின் தற்போதைய கோரிக்கை எதுவெனில் இறுதி யுத்தத்தில் பாதிக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நீதி வேண்டும். அந்த நீதி உண்மையானதும் நேர்மையானதுமாய் இருக்க வேண்டும் என்பதே.

ஏன் என்றால் இலங்கை அரசினால் மேற் கொள்ளப்படும் எந்த விசாரணையிலும் உண்மைத் தன்மை இருக்கும் என அவர்கள் நம்பவில்லை.

அந்தளவிற்கு இலங்கையின் ஆட்சியாளர்கள் தமிழினத்தின் மீது மேற்கொண்ட அடக்கு முறைகளே இதற்கு மூல காரணம் ஆகின்றது. போர் நிறைவுற்று இன்றைக்கு 14 வருடங்கள் கடந்து விட்டன. ஆயினும் தமிழினத்திற்கான நீதியைப் பெற்றுத் தரவோ அவர்களுக்கான சுதந்திரத்தை வழங்கவோ எவரும் முன்வரவில்லை.

இதில் சர்வதேசத்தின் அசமந்தப் போக்கே மிகத் தீவிரம் பெற்றிருக்கின்றது.

ஆம் , வருடா வருடம் ஐ.நா அமர்வு நடை பெறும் காலங்களில் சர்வதேசத்தினால் (ஐக்கிய நாடுகள் சபை) வெளியிடப்படும் அறிக்கை நம்பிக்கையை விதைத்தாலும் அது வெறும் அறிக்கையிடலாகவே கோப்புக்களுக்குள் முடங்கி விடுகிறது.

தமிழர்கள் மீதான இலங்கை அரசின் இனப்படுகொலை தொடர்பான ஐ.நாவின் கூற்றுக்கு கடும் தொனியில் பதில் அளிக்கும் இலங்கை ஆட்சியாளர்களின் பிரதிநிதிகளுக்கு எதிராக எந்த நடவடிக்கைகளும் இன்று வரை நடந்ததாயில்லை.

ஆக, வருடாவருடம் தமிழ் மக்களை ஆசுவாசப்படுத்தும் வகையில் ஐ.நா ஆணையாளரின் அறிக்கையிடல் அமைவதுடன் படம் முடிந்து விடும்.

தற்போது ஐ.நா அமர்வு ஆரம்பித்துள்ள நிலையில் இலங்கை தொடர்பான அறிக்கையிடலில் , கடந்த கால வாக்குறுதிகளை நிறைவேற்றவோ ,பொறுப்புக் கூறவோ ,இலங்கை அரசு தவறினால் சர்வதேச விசாரணையை எதிர்கொள்ள வேண்டி வரும் என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நடா நஷூப் இலங்கையை எச்சரித்துள்ளார்.

அவரின் எச்சரிக்கை வெளியான அடுத்த கணமே அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தது இலங்கை.

அவ்வாறெனின் எதற்காக ஐ.நாவில் இலங்கை விடயத்தை எடுக்க வேண்டும் என்ற கேள்வி பாதிக்கப்பட்ட தமிழினத்திடம் எழுந்துள்ளது.

போர் நிறைவுற்ற காலங்களில் அன்றைய ராஜபக்ஷ ஆட்சியாளர்கள் சர்வதேசத்தை எதிர்த்து சீனாவுடன் ஒட்டி நின்றதன் விளைவாய் அவர்களுக்கு பாடம் புகட்டுவதற்காக கொண்டு வரப்பட்ட இலங்கை அரசுக்கு எதிரான பிரேரணை வெற்றி பெற்று இலங்கை அரசு மனிதப் படுகொலைக்கு பொறுப்புக் கூற பணிக்கப்பட்டிருந்தது.

ஆயினும் ராஜபக்ஷக்களின் ராட்சியம் முடிவுக்கு வந்ததும் போர்க்குற்ற மீறல்கள் தொடர்பான தீர்மானங்களும் பிசுபிசுத்துப் போயின.

அது வெறும் காலம் கடத்தும் விதத்திலேயே நடை போடத் தொடங்கிவிட்டது.

இந்தக் கொடும் செயலு க்கு தமிழர் தரப்பு ஒத்துப்போனதும் ஒரு காரணமாக இருக்கும் நிலையில் தமிழினத்திற்கான நீதி கிடைக்குமா என்பது தான் சந்தேகத்திற்குரியதாயிருக்கின்றது.

தற்போதைய ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி பீடம் சர்வதேசத்தை அரவணைத்துப் போகும் சாணக்கியத்தைக் கொண்டுள்ளதுடன் போர்க்குற்ற மீறல்களுக்கோ சர்வதேச விசாரணைக்கோ இடம் இல்லை என்பதிலும் இராணுவத்தைப் பாதுகாப்பதிலும் மிகத் தீவிரம் காட்டி நிற்கிறது.

தமிழினம் கேட்பதெல்லாம் நடக்காத ஒன்றிற்கு தீர்வல்ல. நடந்த இனப்படுகொலைக்கான நீதியையே.

இந்த நாட்டின் குடி மக்களை இலக்கு வைத்து கொன்றொழித்து விட்டு அப்படி ஒரு சம்பவம் நடக்கவே இல்லை என கொஞ்சமும் குற்ற உணர்வின்றிக் கூறுபவர்களா . உள்ளக விசாரணைகளை மேற்கொண்டு தீர்வு தரப் போகிறார்கள்?

அதிகாரங்கள் பகிர்ந்து தமிழினத்தை அதன் பூர்வீக நிலங்களில் சகல உரிமைகளுடனும் நிம்மதியாக வாழ வைக்கப் போகிறார்கள்?

தமிழினம் இவ்வாறு சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதற்கு அவர்கள் ஏலவே மேற்கொண்ட செயற்பாடுகளே காரணமாக முன்நிற்கிறது.

இது தமிழினத்தின் உரிமைப் பிரச்சினை. தமிழினம் தனது பூர்வீக பூமியில் எந்தவித இடையூறுமின்றி நிம்மதியாக வாழ்வதற்கு விரும்புகிறது.

அதைப் பெற்றுத் தர வல்ல அதிகாரம் சர்வதேசத்திடமே உண்டு. அதை சர்வதேசம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றே விரும்புகிறது.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்-**

அது சரி அல்லைப்பிட்டியில கட்டிடப் பணிக்காக நிலத்தைத் தோண்டிய போது இரண்டு மனித எலும்புக் கூடுகள் கிடைத்ததல்லோ! சங்கதி என்னவாம்.

**கங்காணி-** போர்க்காலச் சூழல் நிலவிய போது, அல்லைப்பிட்டியில அருட்தந்தை ஒருவரும் அவரது உதவியாளரும் காணாமல் போனவியலல்லோ.

அந்தச் சம்பவத்தைத் தான் அல்லைப்பிட்டி ஊர் மக்கள் கதைக்கினம்.

**பண்டிதர்-**என்னவாக இருந்தாலும் அந்த இரண்டு மனித எலும்புக் கூடுகள் தொடர்பிலும் நேர்த்தியான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேணும். அப்ப தான் உண்மையைக் கண்டறிய முடியும்.

**மூப்பர்-** அது சரி, ஞாயிற்றுக்கிழமைகளில முழுநாளும் வெள்ளிக்கிழமைகளில மாலை நேரத்திலும் தரம் 9 இற்கு கீழ் உள்ள மாணவர்களுக்குத் தனியார் வகுப்புகளை நடத்துவதில்லை என்றொரு தீர்மானம் எடுக்கப்பட்டதல்லோ. அது எப்படி அமுலாகுமோ.

**சாத்திரியார்-** இதுகளுக்கென்ன சாத்திரமோ பார்க்க முடியும். எதற்கும் பொறுத்திருந்து தான் பார்க்க வேணும்.

ஆனால் தனியார் கல்வி நிலையங்கள் தங்களிட்டப் படிக்க வரும் மாணவர்களின்ர நலன்களைக் கவனிக்க வேணும். இல்லையெண்டால், அது மிகப் பெரும் பாதிப்பாக அமையும்.

**மூப்பர்-** என்ன சாத்திரியார் சொல்லுறியள்.

**சாத்திரியார்-**

என்ர பேரன் யாழ்ப்பாணத்திலுள்ள பிரபலமான தனியார் கல்வி நிலையத்திற்குப் போறவன். அங்க ஏகப்பட்ட பிள்ளைகள் படிக்கினம்.


ஆனால் வகுப்பில கடைசி வாங்கில்களில இருந்தால் படிப்பிக்கிறது எதுவும் விளங்காதாம்.

**மூப்பர்-**

இதென்ன நாசமறுப்பு. காசைக்கட்டி தனியார் கல்வி நிறுவனத்திற்குச் சென்றால், அங்க கடைசிப் பகுதியில் இருக்கிற மாணவர்களுக்கு எதுவும் விளங்குவதில்லை எண்டால், அது தொடர்பில உரிய தனியார் கல்வி நிர்வாகம் கவனிக்க வேணுமல்லோ.

**சாத்திரியார்-**

அது மட்டுமல்ல, ஒரு வகுப்பில ஏகப்பட்ட மாணவர்கள் இருக்கிறதும் கற்றல் சூழலுக்கு உகந்ததல்ல. ஆகையால வகுப்புக்களைப் பிரித்து ஒரு குறிப்பிட்ட மாணவர் எண்ணிக்கையை வைத்துக் கொண்டு படிப்பித்தால், எல்லா மாணவர்களும் நன்மையடைவினம்.



## தனியார் கல்வி நிறுவனங்கள்
## மாணவரின் வசதியைக் கவனிக்க வேண்டும்

இது விடயத்தில தனியார் கல்வி நிறுவனங்கள் உரிய கவனம் எடுக்க வேணும் எண்டு ஆலடியில ஒரு தீர்மானத்தை எடுப்பம்.

**வாத்தியார்-**

இந்தத் தீர்மானத்தை பாடசாலைகளுக்கும் எடுத்தால் என்ன?

**பண்டிதர்-** என்ன வாத்தியார் சொல்லுறியள்.

**வாத்தியார்-**

இப்ப யாழ்ப்பாணத்திலும் ஒரு சில பாடசாலைகளில தானே மாணவர்கள் குவிந்து இருக்கினம்.

இந்த மாணவர்களின் எண்ணிக்கையை வரையறுத்து, ஏனைய பாடசாலைகளுக்கும் மாணவர்களை அனுப்பினால் எங்கட கல்வித் தரம் உயருவதோட மாணவர்களின் அடைவு மட்டமும் நிச்சயம் உயர்வடையும்.

**சிறாப்பர்-** பாடசாலைகளின்ர பெருமைக்கூடாக மாணவர்களின்ர தகைமையை மதிப்பீடு செய்வதற்கு எப்ப எங்கட சமூகம் தலைப்பட்டதோ, அண்டைக்குப் பிடித்த தோசம் இன்னமும் நீங்கவில்லை.

**கங்காணி-** சிறாப்பர் என்ன சொல்லுறியள்.

**சிறாப்பர்-** பிரபலமான பாடசாலையில் படித்தால் அது தான் பெருமை. மாணவன் படிக்கிறானோ இல்லையோ எண்டது பற்றி பெற்றோர்களுக்குக் கவலையே இல்லை. அவர்களைப் பொறுத்தவரை பிரபலமான பாடசாலைகளில தங்கட பிள்ளைகளைச் சேர்த்து விட்டால். தங்கட கடமை முடிந்து விட்டது என்பது தான்.

**விதானையார்-** இதில கல்வித் துறையினர் தீர்க்கமான முடிவுகளை எடுத்தால், ஏன் இந்தப் பிரச்சினை ஏற்படப் போகுது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் கருத்துரைத்த வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ்; வட மாகாணத்தில 194 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

உண்மையில பாடசாலைகள் மூடப்படுவதற்கான மூல காரணம் மாணவர்கள் இன்மை தான்.

மாணவர் இன்மைக்கு இரண்டு காரணம் இருக்குது. அதில ஒண்டு, ஒரு சில பாடசாலையில மாணவர்கள் குவிய, ஏனைய பாடசாலைகள் வெறிச்சோடிப் போகின்றன.

இரண்டாவது காரணம் பிறப்பு வீதம் மிகவும் வீழ்ச்சி அடைந்து போவது.

இந்தக் காரணங்களால தான், அநேகமான பாடசாலைகள் மூடப்படும் அவலத்துக்கு ஆளாகியுள்ளன.

**பண்டிதர்-** முன்பெல்லாம் நாங்கள் ஊர்ப் பாடசாலைகளில் படிச்சுத்தான் நல்லா வந்தனாங்கள்.

ஊர்ப்பாடசாலைகளில படிக்கிறதால, ஊர்ப் பற்றும் பாடசாலை மீதான பற்றும் வளர்வதோட சமூகக் கரிசனையும் ஏற்படும்.

ஆனால் இண்டைக்கு எத்தனையோ கிலோ மீற்றர் தூரம் ஓடி நகர்ப் பாடசாலைக்கு வாற பரிதாப நிலை ஏற்பட்டிருக்குது.

உண்மையில அந்தந்த ஊர்ப்பிள்ளைகள் அந்தந்த ஊரில உள்ள பள்ளிக் கூடங்களில படிச்சால் ஆளுமையும் அறிவாற்றலும் பல்கிப் பெருகும்.

இது சத்தியமான உண்மை. இவ்வாறு பண்டிதர் கூற , அதனைத் தானும் வரவேற்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பத்திரிகைகளின் விலை குறைவடைய வாய்ப்பிருக்கிறதா வியாசரே?

**கிருஷன் — கரணவாய்**

**என்னை எல்லோரும் நல்லவன் என்கிறார்கள். நான் நல்லவன் இல்லை கெட்டவன் என்று சொல்லி விடவா வியாசரே?**

ஒரு மனிதன் தான் நல்லவன் இல்லை கெட்டவன் என தன்னை உணர்ந்து கொள்ளும் வேளை அவன் நல்லவ னாகிவிடுகிறான்.

ஏனென்றால் தவறு செய்பவர்கள் செய்யும் தவறைச் சரி என்று எண்ணிக் கொண்டே அதைச் செய்வ ார்கள்.

தான் செய்வது தவறு என எப்போது எண்ணுகிறானோ அப்போது அவன் திருந்துவதற்கான கதவு திறபட்டு விட்டது என்றே பொருள்.

தம்பி கிருஷனும் அப்படித்தான். ஆதலால் நான் கெட்டவன் என்று நீங்கள் யாரிடமும் சொல்லத்தேவை யில்லை.

நீங்கள் நல்லவனா கெட்டவனா என்பதை இந்த சமுகமே முடிவு செய்து விடும்.

ஒரு வேளை நல்லவன் என்று பெயர் எடுத்த கெட்டவனா இருப்பீரோ...?

**சுதன் — குப்பிழான்**

**ஐ.நாவின் அவகாசம் முடிந்து விட்டது. இலங்கை அரசு பொறுப்புக் கூற தவறிவிட்டது. இன்னமும் பொறுப்புக் கூறச் சொல்லி ஐ.நா கேட்பது எதை?**

அரசாங்கத்தைப் பொறுத்தவரை இந்த நாட்டின் குடிகளாக தமிழி னத்தை நினைக்கவில்லை என்பது தான் மெய்.

அவ்வாறு நினைத்திருந்தால் முள்ளி வாய்க்காலில் வைத்து தமிழினத்தை கொன்றொழித்திருக்காது.

சரி நடந்தது நடந்து விட்டது என நீதி யான விசாரணையைச் செய்து தவறி ழைத்தவர்களுக்கு தண்டனை வழங்க வேணும் அனுமதித்திருக்கும்.

இதை எதையும் செய்யாமல் படையி னரை தமக்குப்பின் மறைத்து பாது காத்துக் கொண்டு வன்னி பெருநிலப் பரப்பில் இனப்படுகொலை ஏதும் நட க்கவே இல்லை என ஒரே விடயத்தை திரும்பத் திரும்ப கூறிக்கொண்டிருக் காது.

தமிழினம் பாவப்பட்ட இனம் என்பது தான் மெய்யானது.




அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு
SMS செய்யுங்கள்

**நா.முத்துக்குமார் — யாழ்ப்பாணம்**

**ரூபாய் வர்த்தகத்தைப் பயன்படுத்தி இந்தியாவில் இருந்து வாகனங்களை இறக்குமதி செய்ய முடியாதா வியாசரே?**

யாருக்குத்தான் அதற்கு விருப்பம் இல்லை. ஆனால் என்ன செய்வது இலங்கை ரூபாவை யாரும் திரும்பிக்கூட பார்க்கிறார் கள் இல்லையே.

அந்தளவிற்கு ரூபாவின் மதிப்பு இறங்கிக் கொண்டே போகிறது.

இந்தியா இலங்கை ரூபாவை வாங்கி யாரு க்கு விற்பனை செய்யும் சொல்லுங்கள்? முதலில் ஏற்றுமதியை அதிகரித்து டொல ரைப் பெருக்கும் வழியைப் பார்க்க வேண் டும். அதன் பின் ரூபாவில் வியாபாரம் செய்யும் திட்டத்தை அமுல்படுத்துவோம்.

**மதுவன் — மீசாலை**

**கவுண்டமணி செந்திலுக்கு அடித்தால் ஏன் செந்தில் திரும்ப அடிப்பதில்லை?**

சினிமாவில் கதாநாயகனுக்கு வில்லன் அடித்தால் எமக்கு கவலை வரும். வில்ல னுக்கு கதாநாயகன் அடித்தால் அது எம க்கு திருப்தியாய்த் தெரியும்.

ஆனால் நகைச்சுவை நடிகர்கள் யாரிடம் அடிவாங்கினாலும் அது எமக்கு சிரிப்பையே தரும்.

கவுண்டமணி செந்திலுக்கு அடித்தால் தான் சிரிப்பு வரும். செந்தில் கவுண்டமணிக்கு அடிக்கக்கூடாது என்பதில் ரசிகர்களான நாம் தான் உறுதியாய் நிற்கின்றோம்.



கவுண்டமணி செந்திலுக்கு அடித்தால் ஏன் செந்தில் திரும்ப அடிப்பதில்லை?

**திகான் — வடமராட்சி**

**எந்த சூழ்நிலையிலும் போராடி வாழும் மனநிலையினை மாணவர் களுக்கு பாடசாலைகள் கற்பித்தால் தற்கொலைகள் குறையுமே?**

உண்மை தான். மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் மிகச் சிறப்புறச் செயற் படுகிறார்கள் என மகிழ்வதை விடுத்து அவர்கள் மனநிலையை திடப்படுத்தும் செயற்பாடுகளில் தீவிரம் காட்ட வேண்டும். இல்லையேல் சிறு பிரச்சினைகளைக் கண்டுமே மனமுடைந்து வீழ்ந்து விடு வார்கள்.

அதிலும் வெற்றி, தோல்வி சகஜம் என் பதுதான் மிகவும் முக்கியம் வாய்ந்தது.

வெற்றியை மட்டும் சிந்திக்கும் பிள் ளைக்கு தோல்வி வேதனையைத் தரு கிறது. அது மன உளைச்சலை உண்டா க்கி மாண்டு போகும் எண்ணத்தை தோற்றுவிக்கிறது.

**தருஷ் — வதிரி**

**வாழ்க்கை மிகக் கடுமையாகப் போய்க் கொண்டிருக்கிறது வியாசரே என்ன செய்வது?**

நீங்கள் வீதியில் பயணிக்கிறீர்கள். நீங்கள் செல்லும் பாதை பல திருப்பங்கள் (முடக்கு) நிறைந்தது.

அந்தப் பாதையில் இடப்பக்கம் திரும்பும் போது இருக்கும் இலகு தன்மை வலப் பக்கம் திரும்பும் போது ஏற்படாது.

இது போலதான் வாழ்க்கையும், வரும் திருப்பம் எந்தப் பக்கம் வேண்டுமானா லும் வரும். அதை எமக்குச் சாதகமாப் பயன்படுத்திக்கொண்டால் எல்லாம் சரி.

மனிதனைக் கடவுள் படைக்கும் போது செருப்புடன் படைக்கவில்லை. கல்லு முள் ளைக் கடக்க மனிதன் செருப்பை தயார் செய்தான்.

இதுதான் வாழ்வின் இலகுவான தத்துவம்.

**தயாபரன் — ஒட்டுசுட்டான்**

**பத்திரிகைகளின் விலை குறைவ டைய வாய்ப்பிருக்கிறதா வியாசரே?**

பத்திரிகை அச்சிடல் தாள்களுக்கு ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாட்டை பத்திரிகை நிறுவனங்களிடம் கேட்டால் தெரியும்.

அந்தளவிற்கு உலகளவில் பத்திரிகை அச்சிடல் தாள்களுக்கு மிகப்பெரும் தட்டுப் பாடு நிலவுகிறது. இதற்கு ரஷ்யா-உக்ரைன் போர் பெரும் காரணமாக இருக்கிறது.

ஏனெனில் பத்திரிகை அச்சிடல் தாள் களை தயாரிக்கும் தரமான கம்பனிகள் அதிகம் ரஷ்யாவிலேயே உள்ளன.

போரின் தாக்கம், கப்பல் போக்குவரத்தின் கடினம் இவை பத்திரிகை நிறுவனங்களின் கழுத்தை நெரிக்கின்றது என்பதே மெய்.

இதை வாசகர்களாகிய நீங்கள் உணர் வீர்கள் என்று நம்புகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

படம் : நான் ஆணையிட்டால்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடலாசிரியர்: வாலி
பாடியவர்கள் : ரி.எம்.சௌந்தராஜன்



தாய் மேல் ஆணை...
தமிழ் மேல் ஆணை...
தாய் மேல் ஆணை
தமிழ் மேல் ஆணை
குருடர்கள் கண்ணை திறந்து வைப்பேன்
தனியானாலும் தலை போனாலும்
தீமைகள் நடப்பதை தடுத்து நிற்பேன்

இருட்டினில் வாழும் இதயங்களே
கொஞ்சம் வெளிச்சத்தில் வாருங்கள்
நல்லவர் உலகம் எப்படி இருக்கும்
என்பதை பாருங்கள்
எத்தனை காலம் மனிதன் வாழ்ந்தான்
என்பது கேள்வி இல்லை –
அவன் எப்படி வாழ்ந்தான் என்பதை உணர்ந்தால்
வாழ்க்கையில் தோல்வியில்லை...
வாழ்க்கையில் தோல்வியில்லை...

தாய் மேல் ஆணை...
தமிழ் மேல் ஆணை...
தாய் மேல் ஆணை
தமிழ் மேல் ஆணை
குருடர்கள் கண்ணை திறந்து வைப்பேன்
தனியானாலும் தலை போனாலும்
தீமைகள் நடப்பதை தடுத்து நிற்பேன்

தனி ஒரு மனிதன் திருந்தி விட்டால்
சிறைச்சாலைகள் தேவை இல்லை
இருப்பதை எல்லாம் பொதுவில் வைத்ததாலே
எடுப்பவர் யாரும் இல்லை
பிறவியில் எவனும் பிழைகளை சுமாந்தே
வாழ்க்கையை தொடாங்கவில்லை – பின்பு
அவனிடம் வளர்ந்த குறைகளை சொன்னால்
வார்த்தையில் அடங்கவில்லை...
வார்த்தையில் அடங்கவில்லை...

தாய் மேல் ஆணை...
தமிழ் மேல் ஆணை...
தாய் மேல் ஆணை
தமிழ் மேல் ஆணை
குருடர்கள் கண்ணை திறந்து வைப்பேன்
தனியானாலும் தலை போனாலும்
தீமைகள் நடப்பதை தடுத்து நிற்பேன்

# உங்களுக்குத் தேவை தேநீரா... கோப்பையா...?

உங்கள் சுற்றம் மற்றும் நட்புகளில் சிலரைப் பார்த்திருப்பீர்கள்... 'ச்சே, என்ன வாழ்க்கை இது...' என்று அடிக்கடி சலித்துக் கொள்வார்கள். அவர்களின் அந்தச் சலிப்பு, உங்களின் நேர்மறைச் சிந்தையையும் சிதைத்துப் போட்டுவிட வாய்ப்புண்டு. அவ்வளவு ஏன்... சிற்சில தருணங்களில் நீங்களே கூட சலிப்பு மனோநிலைக்கு ஆளாகியிருக்கலாம்.

இப்படி வேலை, குடும்பம், தொழில் முதலாக சகலத்திலும் சட்டென்று சலிப்பு ஏற்பட்டு விடுவது ஏனென்று யோசித்திருக்கிறீர்களா?

பிரச்சினைகள், சவால்கள் இரண்டுக்கும் வேறுபாடு அறியாமல் மனம் குழம்புவதுதான் முதல் காரணம். நம்மில் பெரும்பாலானோர் சவால்களையே பிரச்சினைகளாகவும் துயரங்களாகவும் கருதிச் சலித்துக் கொள்கிறோம். வேலைப்பளு, பொருளாதாரச் சிக்கல்கள், காரியத் தடங்கல்கள் ஆகிய அனைத்தும் நாம் எதிர்கொள்ளும் சவால்களே! இப்படியான சவால்களுக்குத் தீர்வுகள் உண்டு என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

மைக்கேல் ஏஞ்சேலோ உலகப் புகழ்பெற்ற சிற்பி. அவரின் சிற்பக் கூடத்துக்கு, ஒருமுறை நண்பர் ஒருவர் வந்திருந்தார். அற்புதமான சிலை ஒன்றைப் பார்வையிட்டார். அந்தச் சிலையில் மூக்குப் பாகம் சரியில்லையே என்று குறை சொன்னார். அதற்காக ஏஞ்சேலோ வருத்தப்படவில்லை. "நன்றி நண்பரே! உங்களைப் போன்றவர்கள் எடுத்துச் சொல்லும்போதுதான் எனது குறை எனக்குத் தெரியவருகிறது. இப்போதே சரி செய்துவிடுகிறேன்" என்றபடியே உளியை எடுத்துச் சென்று சிலையின் மூக்குப்பாகம் அருகில் மெல்லியதாகத் தட்டினார். சலவைத் தூள் கீழே விழுந்தது.

பின்னர் "இப்போது எப்படி இருக்கிறது?" என்று கேட்டார் ஏஞ்சேலோ. "மிக அற்புதமாக இருக்கிறது. ஒரு குறையும் இல்லை" என்று மகிழ்ந்தார் நண்பர். உண்மையில் மைக்கேல் ஏஞ்சேலோ மிகக் கவனத்துடன் வடித்திருந்த அந்தச் சிலையில் எவ்விதக் குறையும் இல்லை. இது அவருக்கும் தெரியும். ஆனாலும் நண்பரைத் திருப்திப்படுத்த நடித்தார். உளியின் முனையால் சத்தம் வரும்படி லேசாகத் தட்டினார். ஏற்கெனவே, நண்பருக்குத் தெரியாமல் கையில் எடுத்துவைத்த சலவைக்கல் தூளை உளியின் ஓசைக்கு ஏற்ப கீழே போட்டார், அவ்வளவுதான்!

அவரின் நண்பரைப் போல 'தான் பிடித்த முயலுக்கு மூணே கால்தான்' எனும் பிடிவாத அன்பர்கள் பங்குதாரர் வடிவிலும் மேலதிகாரி உருவிலும் வாடிக்கையாளராகவும் வர வாய்ப்பு உண்டு. அவர்களால் ஏற்படும் அசௌகரியங்கள் அல்லது கெடுபிடிகளைப் பிரச்சினைகளாகக் கருதினால் நிச்சயம் மனம் சலித்துக் கொள்ளும்தான். இதுபோன்ற நிலையைச் சவாலாகக் கருதி, வெல்லும் துணிவோடு எதிர்கொள்ள வேண்டும். ஐந்து நண்பர்கள் இருந்தார்கள். வெவ்வேறு ஊர்களில் வெவ்வேறு பணிகளிலும் தொழில்களிலும் மிளிர்பவர்கள். ஓய்வான ஒரு நாளில் சந்தித்துக் கொண்டார்கள். பரஸ்பர விசாரிப்புகளில் ஐந்து பேருமே மன அழுத்தத்தில் சலிப்பில் இருப்பது தெரிய வந்தது. என்ன செய்யலாம் என்று யோசித்த போது, அவர்களில் ஒருவர் "நம் ஆசானைச் சந்தித்து வருவோமா?" எனக் கேட்டார்.



"ஆசான்" என்று அவர் குறிப்பிட்டது, கல்லூரிப் பேராசிரியரைத்தான். இவர்களின் மீது அதீத அன்பும் அக்கறையும் கொண்டவர். எப்போதும் இவர்களுக்கு வழிகாட்டியாக இருந்து வருபவர். நண்பரின் யோசனையை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். ஒரு விடுமுறை தினத்தில் ஐவரும் ஆசானைச் சந்திக்கச் சென்றனர். நல விசாரிப்புக்குப் பிறகு தங்களின் பிரச்சினையைத் தெரிவித்தனர் நண்பர்கள். "நாம் தேநீர் அருந்திக் கொண்டே பேசலாமே" என்றபடி அவர்களை அருகிலுள்ள அறைக்கு அழைத்துச் சென்றார் ஆசான்.

அங்கே மேசையின் மீது பலவிதமான தேநீர்க் கோப்பைகள் இருந்தன. பிளாஸ்ரிக், பீங்கான், கண்ணாடி போன்றவற்றால் செய்யப்பட்ட அவற்றில் சில, விலையுயர்ந்தவை. விலைகுறைந்த சாதாரணக் கோப்பைகளும் இருந்தன. பளபளப்பான விலையுயர்ந்த கோப்பைகளையே நண்பர்கள் கையில் எடுத்துக் கொண்டனர். அப்போது ஆசான் புன்சிரிப்புடன் சொன்னார்: "தேநீர் அருந்த நீங்கள் எடுத்துக் கொண்டவையெல்லாம் அழகிய, விலை உயர்ந்த கோப்பைகள். அவற்றிலும் சிறந்தவையே தேவை என்று நீங்கள் நினைப்பதில் தவறில்லை. ஆனால், இந்த எண்ணமே உங்கள் துன்பங்களுக்கும் மன அழுத்தத்துக்கும் காரணம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

தேநீர், உங்களது வாழ்க்கையைக் குறிப்பதாக வைத்துக் கொள்வோம். பணம், பதவி, அதிகாரம், சமுதாய அந்தஸ்து ஆகியவை எல்லாம் கோப்பைகள் போன்றவை. ஆக, உங்களது தேவை தேநீரே தவிர, கோப்பை அல்ல. தேநீரின் தரம், கோப்பைகளால் தீர்மானிக்கப்படுவதில்லை. வாழ்க்கையின் முழுமை என்பது, நம்மைச் சுற்றி இருக்கும் மற்றவற்றால் தீர்மானிக்கப்படுபவையில்லை!" என்றார் ஆசான். நண்பர்கள் புரிந்து கொண்டார்கள்.

சிறந்த கோப்பைகளைப் பற்றியே யோசிக்கும் நமக்கு, பல சந்தர்ப்பங்களில் தேநீரின் சுவை தெரிவதில்லை. அதேபோல பணத்தையும் பதவியையும் விடாமல் துரத்தும் நாம், அவற்றை விடவும் முக்கியமான வாழ்க்கையை அனுபவிக்கத் தவறிவிடுகிறோம். நம் துன்பங்கள், மன அழுத்தம், சலிப்பு எல்லாவற்றுக்கும் இந்தத் தவறான அணுகுமுறைதான் காரணம்.

அதேபோல் செய்யும் தொழில், எடுத்துக் கொண்ட முயற்சிகள் அல்லது வேலை எதுவாக இருந்தாலும் கடமைக்காகச் செயற்படுவது கூடாது. வெறும் பொருள் ஈட்டும் முயற்சியாக மட்டுமே அதைக் கருதக் கூடாது. நாம் ஈடுபட்டிருக்கும் தொழில் அல்லது பணியின் விளைவுகள் ஏதோ ஒருவகையில் சமுதாயத்துக்குப் பலனளிப்பவை. அப்படியான நல்ல விளைவுகளுக்கு நீங்களும் காரணம் என்று யோசித்துச் செயற்பட்டீர்கள் என்றால் அலுப்போ, சலிப்போ ஏற்படாது. பூரண திருப்தியும் அளவில்லா மகிழ்ச்சியும் உங்களுக்கு உந்துதலாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராந்திய வல்லரசுகளும் பிரதான வல்லரசும்

**ரஷ்யா தன் எதிரியுடனான போரில் தன் இராணுவ சமனிலை குலையும் போது தன்னை தற்காத்துக் கொள்ள ஒரு புதிய ஆயுதத்தை தன் கரங்களில் எடுக்குமானால் அது நிச்சயம் உலகத்துக்கு எதிரான அணுப் போராகவே உருவெடுக்கும் என்பதை இரா ணுவ போரியல் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின் றார்கள்.**



மூன்றாவது உலகப் போர் நடைபெறும் என்று ஒரு சில போரியல் ஆய்வாளர்களும் மூன்றாவது உலகப் போர் நடைபெறாது என்று வேறு சில போரியல் ஆய்வாளர்களும் இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் தங்கள் கருத்துக் களை பரவலாகப் பதிவிட்டு வருகின்றார்கள்.

இவ்வேளையில் மூன்றாவது உலகப் போருக் கான சாத்தியங்கள் இருக்கின்றதா..? அப்படி சாத்தியங்கள் இருப்பின் அதன் ஆரம்பப் புள்ளிகள் அல்லது அறிகுறிகள் இந்த உலகில் எங்காவது தென்படுகின்றதா..? என்று சிந்திப்பதே சமகா லத்தில் நமக்கும் நாம் வாழும் உலகத்துக்கும் நன்மை பயக்கக் கூடிய ஒரு விடயமாகும்.

ஆன்மிக ரீதியாக உலகில் பெரும் போர்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்று பிரார்த்திப்ப வர்களும் வாதிடுபவர்களும் சிந்திப்பவர்களும் இருக்கும் இதே உலகத்தில்தான். தங்கள் தேசங் களின் நன்மைக்காக , சுயநலன்களுக்காக இன, மத, அரசியல், இராணுவ தந்திரோபாய ரீதியாக பல போர்கள் நடைபெற வேண்டும் என்று சிந்திப்பவர் களும் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

முதலில் அமைதிக்கும் அமைதியின்மைக்கும் நடக்கும் அகம், புறம் சார்ந்த போராட்டமே நம் மனித வாழ்க்கையும் இந்த உலகமும் என்பதை நாம் எம் மனதில் உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.

இந்த உலகில் எதிரெதிரே இரண்டு தரப்புக்கள் இருப்பதும் அது ஒன்றோடொன்று முரண்பட்டு போர் செய்வதும் அதில் ஏதாவது ஒரு தரப்பு வெற்றி பெறுவதும் அல்லது தங்களுக்குள் ஒரு தீர்வு பொறி முறை ஒன்றை உருவாக்கி பின் சமாதானப் புறாக்களை பறக்க விடுவதும் காலம் காலமாய் இருந்து வரும் ஒரு இராணுவ அரசியல் இராஜதந் திரமாகும்.

இந்த நவீன உலகில் நவீன தொழில்நுட்ப ரீதியிலான ஆயுதங்களை பெருக்குவதும் பல போரியல் சார்ந்த வியூகங்களை அமைப்பதையுமே தம் அன்றாட வாடிக்கையாக வைத்திருக்கும் சில தேசங்களே மூன்றாம் உலகப் போருக்கான ஆரம்பப் புள்ளியாய் அமைந்து விடுமோ..? என போரியல் ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள்.

பூகோள வல்லரசு என்ற ஒன்று இருக்குமானால் அதற்குப் போட்டியாக பல பிராந்திய வல்லரசுகள் அரசியல், பொருளாதார, இராணுவ, தொழில்நுட்ப ரீதியாக தம்மை பலப்படுத்திக் கொண்டு பூகோள வல்லரசு என்ற பெரும் இலக்கை நோக்கி போரியல் சார்ந்த பல வியூகங்களை அமைத்து பிற நாடுகளு டன் கூட்டாகவோ, தனியாகவோ பயணிக்க ஆரம் பிக்கும்.

உலகில் உள்ள ஒரு தேசமானது அரசியல் ரீதியாக, இராணுவ ரீதியாக, இராஜதந்திர ரீதியாக, நவீன தொழில்நுட்ப ரீதியாத மற்றும் ஆயுத ரீதியாக பெரும் விஸ்வரூபம் எடுத்து விட்டால் அது ஒரு சாம்ராஜ்ய கனவோடு தன் எல்லைகளை இயல்பாக விஸ்தரிக்கவே செய்யும்.

ஆசியா கண்டமே மூன்றாம் உலகப் போருக் கான பெரும் தோற்றுவாயாக அமைந்து விடுமோ என போரியல் ஆய்வாளர்கள் அஞ் சினார்கள். ஏனெனில் தென்னாசிய நாடுகளான இந்திய சீன எல்லைகள் எப்போதும் நீறுபூத்த நெருப்பாகவே இன்று வரை காணப்படுகின் றது. அதை விட இந்திய -பாகிஸ்தான் எல் லைகளும் துப்பாக்கி வேட்டுக்களால் அதிர்ந்த வண்ணமே இருந்தன.

இந்திய, சீன, பாகிஸ்தான் எல்லைகளின் பதற்றங்களை புறந்தள்ளும் முகமாக ஆசியா கண்டத்தில் ரஷ்யாவால் உக்ரைனுக்கு எதிராக புதிய போர் வியூகம் திறக்கப்பட்டது. இது நேட்டோ நாடுகளுக்கு எதிரான அணுப் போராக உருவெடுக்கும் சூழலை எட்டியி ருக்கின்றது. அதற்கு ரஷ்யா தன்னை தயார்ப் படுத்தியும் வருகின்றது.

ரஷ்யா - உக்ரேன் இடையிலான போரை மிக உன்னிப்பாக அவதானித்து வரும் சீனா எதிர்காலத்தில் அமெரிக்கா, இந்தியா, தாய்வான் இடையிலான புதிய போர் அரங்கு களைத் திறப்பதற்கு இதை வெள்ளோட்ட மாகவும் பார்த்து வருகின்றது.

தென் சீனக் கடலின் பெரும் சர்ச்சையில் சிக்கியிருக்கும் சீனா அமெரிக்காவை எதிர் த்து தன்னை உலகின் ஒரு வல்ரசாக நிலை நிறுத்துவதற்கு கடும் பிரயத்தனத்தோடு செயற்படுகின்றது. தன்னுடைய ஒன்றிணைந்த சீனா என இந்தியாவின் வட கிழக்கு பகுதிகளையும் தாய்வானையும் தற்போது வரை உரிமை கொண்டாடுகின்றது.

உலக வல்லரசுகள் என தங்களை நிலைநிறுத்தும் நாடுகள் பெரும்பாலும் ஆயுதப் போர்களை தவிர்த்து தமக்கு எதி ரான நாடுகளிடையே உளவியல் ரீதியி லான, பொருளாதார ரீதியிலான போர்களை கத்தியின்றி, சத்தமின்றி, இரத்தம் இன்றி நடத்துவதையும் காணலாம்.

போரைத் தொடங்கினால் தங்கள் பொருளாதாரம் அழிந்து விடும் என எண் ணும் சில நாடுகள் போரைத் தவிர்த்து தங்கள் நாட்டின் வளர்ச்சியில் சிரத்தையாக இருப்பதையும் காணக்கூடியதாக இருக் கின்றது. அமைதியையும் தங்கள் மண் ணின் வளர்ச்சியையும் விரும்பும் நாடுகள் இருக்கும் வரை மூன்றாம் உலகப்போர் எப் போதும் சாத்தியமாகாத ஒன்றாகவே இருக் கும் என்பது சில சர்வதேச இராணுவ போரியல் ஆய்வாளர்களின் பெரும்பா லான கருத்தாகும்.

போரற்ற உலகே எப்போதும் நிரந்தர மானது. ஆனால் சில சந்தர்ப்பங்களில் போர் தவிர்க்க முடியாத ஒன்றாக மாறி விடுவதும் அந்தப் போரை காரணம் காட்டி போரற்ற சமாதானத்தை உருவாக்குவதும் உலக நாடுகளின் நியதியாக காலந்தோ றும் இருந்து வருகின்றது.

[illegible]

உலகிலேயே மிகவும் வெற்றிகரமான முதலீட் டாளர்களில் ஒருவர் 92 வயது ஆகும் வாரன் பஃபெட். இப்போது அவரின் சொத்து மதிப்பு 11,710 கோடி அமெரிக்க டொலர் (இந்திய ரூபாய் மதிப்பில் 9,60,220 கோடி) ஆகும். அவர் இளம் வயதில் எப்படிச் சிக்கனமாக, எளிமையாக இருந்தாரோ அப்படியே இன்றும் இருக் கிறார். வாரன் பஃபெட் எப்படி எளிமையான வாழ்க் கையை விரும்பி வாழ்கிறார் எனப் பார்ப்போம்.

### 65 ஆண்டுகள் பழைய வீடு...

வாரன் பஃபெட் 65 ஆண்டுகளுக்கு முன் அதாவது, 1958 ஆம் ஆண்டு ஒமஹாவில் 31,500 டொலருக்கு ஒரு வீட்டை வாங்கினார். அந்த வீட்டில் தான் அவர் இப்போதும் வசிக்கிறார். அவரது அலுவலகமான பெர்க்ஷையர் ஹாத்வேயில் (Berkshire Hathaway) 50 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிகிறார். இந்த அலுவலகத்தில் 25 பேர் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களைத் தேடி யாரும் வரமாட்டார்கள் என்பதால், புதிய பெரிய அலுவலகம் எதுவும் தேவையில்லை என வாரன் அலுவலகத்தை மாற்றவில்லை.

### எளிமையான காலை உணவு...

பணக்காரர்கள் பெரும்பாலும் பிரத்தியேக சமையல் காரர்களை வேலைக்கு வைத்து விதவிதமாக சமைத்து சாப்பிடுவார்கள். ஆனால், வாரன் அலுவலகத்துக்கு செல்லும் வழியில் வேக வைத்த இறைச்சி, முட்டை மற்றும் சீஸ் பிஸ்கட் சாண்ட் விஜ் என எளிமையாக சுமார் 4 டொலருக்குதான் காலையில் சாப்பிடுகிறார். "6 வயது சிறுவர்கள் இடையே இறப்பு விகிதம் மிகவும் குறைவாக இருக்கிறது. எனவே, அவர்கள் விரும்பிச் சாப்பிடும் உணவை நானும் சாப்பிட்டு வருகிறேன்" என்று சொல்லியிருக்கிறார்வாரன்.

### பல ஆண்டுகளாக ஒரே கார்...

வாரன் பஃபெட் இதர கோடீஸ்வரர்களைப் போல அடிக் கடி கார்களை மாற்றும் பழக்கம் கொண்டவர் இல்லை. ஒரு காரை வாங்கினால், அதைப் பல ஆண்டு கள் பயன்படுத்து வது அவர் வழக்கம். நாள் ஒன்றுக்கு 15 கிலோமீற்றர் கூட காரில் பயணம் செய்வதில்லை. இந்த நிலையில், எதற்கு காரை மாற்ற வேண்டும் என்பதே அவர் கேட்கும் கேள்வி. மேலும், எப்போது கார் விலை மலிவாக இருக்கிறதோ அப்போதுதான் வாங்குவார். ஆலங்கட்டி மழை பெய்ததால் சேதம் அடைந்த கார்களை விலை குறைத்து விற்பார்கள். அது போன்ற கார்களைத் தான் வாரன் பஃபெட் வாங்குகிறார்.

### குறைந்த செலவில் பொழுதுபோக்குகள்.

பெரும் பணக்காரர்களின் பொழுதுபோக்குகள் பெரும் பாலும் அதிக செலவு வைப்பதாக இருக்கும். ஆனால், வாரனின் முக்கியமான பொழுதுபோக்கு சீட்டு விளை யாடுவதுதான். இவர் வாரத்துக்கு சுமார் 8 மணி நேரம் முதல் 12 மணி நேரம் வரை சீட்டு விளையாடுகிறார். இது தவிர, டேபிள் டென்னிஸ் விளையாடுகிறார்.

### நண்பர்களுக்கு அதிகம் செலவிடுவதில்லை...

வாரன், தன் நண்பர்களை நன்றாகக் கவனித்துக் கொள்கிறார். ஆனால், அவர்களுக்கு அதிகம் செல விட மாட்டார். இவரின் விளையாட்டுத் தோழராக மைக்ரோ சாஃ ப்ட் பில்கேட்ஸ் இருக்கிறார். இருவரும் கிட்டத்தட்ட கால் நூற்றாண்டுக்கும் மேலாக நண்பர் களாக இருக்கிறார்கள். இருவரும் சந்தித்துக் கொள்ளும் இடம் கூட டென்னிஸ் மைதானமாகத்தான் இருக்கிறது.

### செல்போனை நீண்டகாலம் பயன்படுத்தும் வாரன்...

எந்த ஒரு பொருளாக இருந்தாலும் அதை நீண்ட காலம் பயன்படுத்தும் பழக்கத்தைக் கொண்டவர் வாரன் பஃபெட். அவர் பயன்படுத்தும் போன் சரியாக செயற்படும்போது புது போனை அவர் வாங்க விரும்புவதில்லை. அவர் நீண்ட நாட்களாக நோக்கியா ஃபிளிப் போனைத்தான் பயன்படுத்தி வந்தார். அதன்பிறகு 2020 இல் தான் அவர் ஆப்பிள் நிறுவனத்தின் ஐபோன்-11 வாங்கினார்.

### உயர்தர டிசைனர் ஆடைகளைத் தவிர்க்கிறார்...

வாரன் எப்போதும் உயர்தர டிசைனர் ஆடைகளை விரும்புவதில்லை. சீனாவைச் சேர்ந்த மேடம்-லீ என்பவர் தைத்துக் கொடுக்கும் கோட்டுகளைதான் அவர் அணிந்து வருகிறார். அதுவும் வாரன் பஃபெட்டுக்கு இந்த ஆடைகளைப் பரிசாக அளித்து வருகிறார் மேடம் லீ. அதே போல, எங் கெல்லாம் பணத்தைச் சேமிக்க முடியுமோ, அதைச் செய் கிறார். அவர் ஒரு முறை பங்கு முதலீட்டாளர் ஒருவருடன் பயணம் செய்யும்போது, மதிய உணவு சாப்பிடும்போது, மெக்டோனால்ட்ஸின் கூப்பன்களைப் பயன்படுத்தி பணத்தை மிச்சப்படுத்தியிருக்கிறார். உலகப் பெரும் பணக்காரரே இவ்வளவு சிக்கனமாக இருக்கும்போது, நாம் மட்டும் அதிரடியாகச் செலவு செய்வது நியாயமா?

## எளிமையே அழகு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வறுமையும் வெறுமையும்



வறுமையில் இருந்து
வள்ளலாய் மாறியும்
வறுமையில் வீழ்ந்தேனே!
சிறுமையாய் அல்ல
சிந்தித்து நடக்காது
சீரழிவு பெற்றேனே!

கஞ்சியும் கூழும்
தினம்தினம் குடித்தே
இவ்வாழ்வில் மகிழ்ந்தேனே!
மிஞ்சிய பிள்ளைகள்
வெளிநாடு சென்றதும்
மிடுக்குடன் வாழ்ந்தேனே!

அஞ்சாமல் வாழ்ந்து நான்
தஞ்சம் அடைந்தவர்க்கு
தர்மங்கள் செய்தேனே!
எஞ்சிய வாழ்வையும்
ஏற்றமுடன் வாழ
என்னி மகிழ்ந்தேனே!

வசதிகள்,வாய்ப்புகள்
பலபல இருந்தும்
வாழ்வே வெறுமையாச்சே!
அசதியாய் தூங்கிட
அருகினில் பிள்ளைகள்
இல்லாத நிலைமையாச்சே!

படுக்கையில் வீழ்ந்து
பராமரிப்பாரின்றி
பரிதவித்திருக்கின்றேன்!
ஒடுங்கிய வாழ்வில்
பிள்ளைகள்துணையின்றி
வறுமையில் வாழ்கின்றேனே!

எஸ்.சிவானந்தராஜா,
பண்டத்தரிப்பு.

## தமிழினத்தின் மன்னன்?


கையளவு நாட்டில் நடக்கும்
கடலளவு விசித்திரங்கள் காணீர்
கட்சிக் கொடிகள் ஏராளம்-இருந்தும்
கண்ணீர் விடுவோர் -தொகை தாராளம்
யுத்தம் நீண்டதும் இங்கேதான் -பெரும்
சட்டம் நீள்வதும் இங்கேதான்
தேர்தல் காலமெனில் தேனாறு பாயும் -சில
தேவைகள் முடிந்ததும் எம் தேசமே சாகும்

பட்டறிவு என்பது
பாடையிலே போனதால்
சட்டறிவு எமைச்
சமைத்துத் தின்கிறது
நடிக்கத் தெரிந்தவன் ஆளுகைக்குள்
நம்மினம் முடங்கிக் கிடக்கும் வரை
நன்மை செய்பவன் முன்னே
நாறிக் கிடக்கும் நம்நாடு

இனத்தை ஒழித்திட ஒத்தூதி
இரவல் புகழ் இருப்பதிலும்
மனதில் தெளிவுடைய நெஞ்சனாய்
மண் காக்கும் மைந்தனே மன்னன்.

சாந்தையூர் வினிஸ், பண்டத்தரிப்பு.

## அல்லல் மாறுமா?



வாக்களித்தோம்
வாக்குறுதிகளுக்காய்
வலம்புரியாகுமேன...!
வாதங்களே வலுவாகின!
வாதங்கள்
பிரதிவாதங்களாகி
மனித வாதங்கள்
மறந்து
இனவாதங்களும்
மதவாதங்களுக்குள்
சர்வதேச வாதங்களும்
சறுக்களில்!
பிரதேச வாதங்கள்
பிடிவாதங்களாகி
தொல்பொருள் வாதம்
அறம், பொருள்,இன்பம்
மறந்தே
ஓளடதம் இல்லா
வாதமாகிடும்
அல்லல் மாறுமா

தமிழினியன், வவுனியா.

## மௌனத்தின் தேடல்- 674



## மனிதம்

பசியோடு வந்த ஏழைக்கு
வயிறார உணவு வழங்கி
அவன் முகத்தில் தோன்றும்
மலர்ச்சியைப் பார்ப்பதே மனிதம்

பிரமன், கொக்குவில்.

## மௌனத்தின் தேடல்- 675



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## சுமை

சுமைதாங்கியாய் அன்று இருந்த போது சுற்றம்

சூழ சுற்றியிருந்த உன் உறவுகள்- நீ

முதுமை எய்தி சுமையாகிப் போனதால்

சீ என்று சினக்க யாரும் கேட்பாரின்றி

நாதியற்று நடுத்தெருவில் வந்து இருந்து கையேந்தும்

கையறு நிலைதான் இன்றைய நாகரீக

வாழ்வியலின் எழுதாத தத்துவங்கள்

சி.மகாலட்சுமி, கொக்குவில்.

## இரக்கத்தினாலா!

நவநாகரீக நங்கை
எட்ட நின்றே கொடுக்கும்
நோட்டு, இரக்கத்தினாலா!
படம் பிடிக்கும் போஸிற்கா?

பி.மதுஷ்சன், தையிட்டி.

## வாழ்வைத் தேடி

இக்காட்சியைக் காண்கையில்
தனியொருவர் உண்பதற்கு
உணவு கிடைக்காது போனால்
உலகை அழித்திடும் காத்திரமான
ஆதங்கத்தை வெளிப்படுத்திய
மகாபாரதியை நினைவூட்டும்
இச்சிறுமியின் நற்செயலும்
வாரித் தரும் பெரும் ஆறுதலுடன்
இது இலஞ்ச ஊழலுக்கும் முற்றுப்புள்ளி
உயர்விற்கு உயிர் கொடுப்பது
உழைப்பென்பதை உணரும் போது
இல்லாமையும் இல்லாமல் போய்விடும்.

க.நாகராசா,
நுணாவில்.

## பிச்சைக்காரன்

பெற்ற பிள்ளை என்னைப் பார்க்கவில்லை
சுற்றம் கூட என்னை ஏற்கவில்லை
கஷ்டம் வந்து என்னைக் கட்டிப் போட
ஆதரிப்பார் யாரும் இன்றி வீதியோரம்
முதுமை வந்து என்னை முடக்கிப் போட
ஒரு சாண் வயிற்றுக்காய் கை ஏந்த
பற்று வைத்து பாலகன் இட்ட பிச்சை
இந்தப் பிச்சைக்காரன் வயிற்றில் பாலை வார்க்க

கும்பவாழியான்,
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல்புறா

## கரும்பும் கூலியும்




காலத்தின் பதிவு 67

இந்த வேதனையுடன் வேதனையாக இளையபல்லவனையும் நினைத்துப் பார்த்த மஞ்சளழகி அவனிடம் சீற்றம் கொள்வதா, காதல் கொள்வதா என்பது சரியாக விளங்காததால், உள்ளது காதலானாலும் அதை மறைத்துச் சீற்றம் கொண்டுவிட்டதாகத் தன்னைத் தானே ஏமாற்றிக்கொண்டாள். அன்றுவரை அக்ஷயமுனைக் கோட்டைத்தலைவனின் அருமந்த செல்வியாக, கொள்ளையரைக் கவர்ந்த ராணியாக, எந்தக் கல்மஷமும் அற்ற சுதந்திரப் பறவையாக திரிந்து வந்த தன் வாழ்வு, இளையபல்லவன் வருகையால் எத்தனை மாற்றத்தை அடைந்து விட்டது என்பதை எண்ணி, இவர் ஏன் வந்தார் இங்கே? என்று கடும் கோபத்துடன் தன்னைக் கேட்டுக் கொண்டாள்.

அந்தக் கோபத்தின் ஊடே எழுந்த இளையபல்லவனின் சிரித்த முகம், சிங்கத்தின் குகைக்குள் புகுந்து சிங்கத்தையே மிரட்டுவது போல் தன் தந்தையை மிரட்டிய காட்சி, வில்வலனது வாளை அனாயாசமாகத் தன் அந்தக் கோபத்தைப் பெரிதும் சமனப்படுத்தின.

அத்துடன் கடைசியாக அவன் தன் இடையைத் தொட்டது, தொட்ட கை தொட்ட இடத்தில் நின்றது. இவற்றை நினைக்க நினைக்க இன்ப அலைகள் அவள் உடலை ஊடுருவிச் சென்றன.

இப்படி மாறுபட்ட உணர்ச்சிகளால் ஏற்பட்ட மன அலைச்சலாலும் அவற்றின் விளைவாக எழுந்த கனவுக் காட்சிகளாலும் பேசாமலே நீண்டநேரம் படுத்துக் கிடந்த மஞ்சளகி கடைசியாக, தன் மனத்தைச் சற்றே திடப்படுத்திக் கொண்டு மெள்ளப் பஞ்சணையில் எழுந்து உட்கார்ந்து கனவிலிருந்து விழித்தவள்போல் தன் கண்களைச் கசக்கிக் கொண்டாள்.

அவள் மன ஓட்டத்தையும் நெகிழ்ச்சியையும் இன்ப துன்பங்களையும் மாறி மாறித் தெரிந்த முக பாவங்களிலிருந்து உணர்ந்து கொண்ட பலவர்மன் அவள் மீது பரிதாபம் கலந்த பார்வையை வீசியதன்றி, "மகளே! பெருங்குடி மக்கள் எந்த அதிர்ச்சியையும் தாங்கக் கடமைப்பட்டவர்கள். நாட்டு வரலாற்றில் பிணைபட்டிருப்பவர்கள். மன அலைச்சலுக்கு இடம் கொடுப்பதில் அர்த்தமில்லை" என்று அன்புடன் கூறவும் செய்தான்.

அவன் பேச்சில் பெரும் பொருள் புதைந்து கிடப்பதை மஞ்சளழகி உணர்ந்து கொண்டாள். தான் பெருங்குடி மகளென்பதையும் தன்னைச் சூழ்ந்திருக்கும் மர்மத்தாலும் தான் மனம் நெகிழ்வது உசிதமில்லையென்பதையும் கடமையை முன்னிலையில் வைத்துக் காரியம் செய்வதே தன் பொறுப்பு என்பதையும் தந்தை சுட்டிக் காட்டுகிறார் என்பதைச் சந்தேகமறப் புரிந்து கொண்ட மஞ்சளழகி "தந்தையே" என்று மேலும் விளக்கம் கேட்கக் கொஞ்சும் குரலில் பலவர்மனை அழைத்தாள்.

அசுர குணமுள்ள பலவர்மனின் முகத்திலும் அந்தச் சொல் பெரும் இன்பதை விளைவித்து. "மகளே!" என்று அவனும் அவளை அழைத்தான்.

மஞ்சளழகியின் மலர் விழிகள் அவனை ஏறெடுத்து நோக்கின. "ஏன் தந்தையே?" என்று வினவினாள் அவள், அன்பு ததும்பும் குரலில்.

பலவர்மன் கூறிய பதிலில் உணர்ச்சி பெரிதும் பிரவாகித்தது. "உனக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன் மகளே!" என்ற பலவர்மன் குரலில் ஒரு குழைவும் இருந்தது.

அந்தச் சில நாழிகைகளில் பலவர்மன் அத்தனை தூரம் மாறிவிட்டது மஞ்சளழகிக்குப் பெரும் வியப்பாயிருந்தது.

(தொடரும்...)

---

# நான் வைரமுத்து பேசுகிறேன்... 13

## எழுத்தும் - எழுத்தாளரும்

எனது முதல் நூலான 'வைகறை மேகங்களுக்கு அழகான ஓர் ஆணிந்துரை தந்தார். என் மீது இரகசியமாய் ஒரு தாயன்பு வைத்திருந்தார்.

அவரது மரணத்துக்குச் சில மாதங்களுக்கு முன்பு தன் இல்லத்திற்கு வரச் சொல்லி என்னை அன்போடு அழைத்தார்.

அவர் அழைத்த போதெலலாம் சென்று சந்திக்காத நான் பிறகு சந்தித்தேன்.



எப்போது தெரியுமா?

அமெரிக்காவிலிருந்து அந்த ராஜகுயிலின் கூடு மட்டும் விமானத்தில் கொண்டு வரப்பட்டதே. அப்போது சந்தித்தேன்.

ஓ!... எங்கள் சிறு கூடற்பட்டியின் ஜீவ நதியே! நீ இன்னும் எங்கள் உதிரங்களிலெல்லாம் ஓடிக் கொண்டிருக்கிறாய்.

### எனது பார்வையில் கண்ணதாசன்

கண்ணதாசன் - மூதலில் நேசிக்கத் தெரிந்த மனிதன், பிறகுதான் கவிஞன்.

இந்த மண்ணில் ராஜ குடும்பங்களிலிருந்து க்விஞர்கள் பிறப்பதில்லை.

இந்த மண்ணுக்கு வரலாறாயிருக்கிற வறுமையும் இந்த மண்ணில் பரம்பரையாய்ப் பாதுகாக்கப்பட்டு வரும் பலவீனங்களும் ரத்தம் கலந்த கண்ணீரும் எப்போதும் இருந்து வரும் ஏமாற்றங்களும் அவற்றுக்குத் தீர்வு காண வேண்டும் அல்லது அவற்றிலிருந்து தப்பிக்க வேண்டும் என்ற தவிப்பும் தகிப்பும் இந்த மண்ணின் கவிஞர்களை உற்பத்தி செய்யும் கருவறைகளாகும்.

எங்கள் கண்ணதாசனும் அந்தக் கருவறையின் குழந்தைதான்.

குருவிகள் கூடு கட்டக்கூட அஞ்சும் அந்தச் சிறுகூடற் பட்டியின் பாலை வெளிகளில் பிறகு எப்படி அவன் ஜீவ நதியாய்ச் சுரந்து வந்திருக்க முடியும்?

**"பட்டப் படிப்புப் படிக்கத் தான்**
**நினைத்திருந்தேன்.**
**கொட்டும் மொழிமழையில் குளிக்கத்தான் நினைத்திருந்தேன்**
**ஆனால்—**
**எட்டாம் வகுப்பை எட்டத் தான்**
**என் பெற்றோர்**
**இட்டார் பின் ஏழ்மையிலே எனை**
**உலகில் விட்டார்**
**கல்வியிலான் வாழ்வு கரைகாணாத்தோணி எனக்**
**கலங்கினேன், கற்றோரைக்**
**கண்டு கரையில் நின்றேன்**
**வந்தாயே தாயே! வாமகனே**
**என்றாயே!**
**தந்தாயே நாவில்**
**சரஞ்சரமாய்த் தமிழ்ப்பாடல்**
**உன்னை மறப்பேனா?**
**உன்னைப்பாடா திருப்பேனா?**
**என்னை எரித்தாலும்**
**எரியும் நெருப்பினிலே**
**உன்னைத்தான் காணும்**
**உலகம் தமிழ்த்தாயே!**
**சின்னமகன் உன்னைச்**
**சிரந்தாழ்த்தி**
**வணங்குகின்றேன்"**

என்று தமிழ்த் தாயைப் பார்த்து அவர் சுயபுராணம் சொல்லும் போது அவரது நதிமூலம் தெரிகிறது நமக்கு.

கவிஞர் கண்ணதாசனைப் பொறுத்தமட்டில் என்னை வியப்பின் விளிம்பிற்குத் தள்ளிய விடயம் ஒன்று உண்டு. சத்தம் போடும் இரத்தம் கொண்ட ஒரு சராசரி மனிதனுக்கு எத்தனை பலவீனங்கள் அவருக்குண்டு என்பதை அவரே அறிவிக்கிறார்.

ஆனால் அந்தப் பலவீனங்களெல்லாம் அவரது கவித்துவத்தை வளர்த்து விட்டனவே தவிர, வற்ற வைக்கவில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'
சுகமான விடியல் 355
வலம்புரியின் மருத்துவச்சுடர்

# உணவே மருந்து

**"நோ**யற்ற வாழ்வே குறை வற்ற செல்வம்**"** என்ற கருத்தில் எவருக்கும் இரு வேறு பட்ட அபிப்பி ராயங்கள் இருக்க முடியாது. நோய் அல்லது பிணி யானது வாழ்க்கையில் உண்டுபண்ணும் தாக்கம் மிகப் பெரியது. உடல் உபாதை, மன உளைச்சல், வீண் பண விரயம், உயிரிழப்பு என இத்தாக்கங்களை எண்ணிக்கொண்டே போகலாம். ஒரு நோயாளியினால் குடும்பத்தில் ஏனைய அங்கத்தவர்களுக்கும் அந்நோயாளியைப் பராமரிப்பவருக்கும் ஏற்படும் சிரமங்கள் சொல்லிலடங்காதவை.

நோயின் பரிமாணம் காலத்துக்கு காலம் மாறுபடுகின்றது. பண்டைய காலத்தில் தொற்று நோய்களும் சிசு மரணங்களும் மகப்பேற்று கால உயிரிழப்புக்களும் மனித சமுதாயத்தை உலுக்கிய பேரவலங்கள் ஆகும். மருத்துவம் பெருவளர்ச்சி கண்ட பின் 21ஆம் நூற்றாண்டில் தொற்று நோய் களற்ற பல நோய்களும் புற்று நோயும் விபத்துக்களும் மனித இனத்துக்கும் பெரும் சவாலாக விளங்குகின்றன.

வாழ்க்கை முறையில் ஏற்பட்ட பாரிய மாற்றங்களே இப்புதிய சவாலுக்கு காரணமாக அமைகின்றது. நீரிழிவு, உயர்குருதியமுக்கம், சிறுநீரக செயலிழப்பு போன்ற முக்கிய நோய்கள் மிக அண்மைக் காலத்தில் அதிகளவு பாதிப்பை எம் மக்களிடையே ஏற்படுத்தியிருக்கின்றது. இதய நோய், சுவாச நோய்களின் தாக்கங்களும் மிக அதிகரித்தே செல்கின்றது.

ஒரு சாரார் பரம்பரை மீது இதற்கு பழியைப் போடலாம். கால் நூற்றாண்டுக்குள் ஏற்பட்ட இந்த நோய்களின் அதிகரிப்புக்கு பரம்பரை மீது பழியைப் போடுவதை வீண் பழியென்றே கொள்ளலாம்!

வாழ்க்கை முறையில் ஏற்பட்ட மாற்றம் என்று குறிப்பிடும் போது குறிப்பாக நாம் உண்ணுகின்ற உணவுவகைகளில் ஏற்பட்ட மாற்றமும் உடற்பயிற்சிகள் அற்ற வாழ்க்கை முறையையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. உதாரணமாக ஒரு திருமண வைபவத்தில் சுமார் கால் நூற்றாண்டுக்கு முன்பரிமாறப்பட்ட வடை, முறுக்கு, சீனி அரியதரம், பால்றொட்டி, சிப்பி பலகாரம் போன்றவற்றை இன்று காண்பது அரிது. மாறாக பற்றிஸ், கேக், ரோல்ஸ், பேஸ்ரி என சுத்தமான கோதுமை மா தயாரிப்புகளே பரிமாறப்படுகின்றன. அதே போல் கால்நூற்றாண்டுக்கு முன் குடாநாட்டில் இருந்து துவிச்சக்கரவண்டிகள் இன்று கணிசமாக குறைந்து விட்டன.

திருவள்ளுவர் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உணவுதான் நோய்க்கு முக்கிய காரணி என்ற கருத்தை கோடிட்டுக் காட்டியுள்ளார்.

மருந்து எனும்95ஆவது அதிகாரத்தில் வள்ளுவர் முத்தான 7 குறள்களின் மூலம் உணவு எவ்வாறு நோயில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என குறிப்பிட்டுள்ளார். அவர் குறிப்பிட்ட கருத்துக்களை அதே ஒழுங்கில் நோக்குவோம்.

***"மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்று"***

இந்த முதலாவது குறள் உணர்த்துவது என்னவெனில் உணவும் செயலும் மிகுந்தாலும் குறைந்தாலும் வாதம், பித்தம், சிலேத்துமம் ஆகிய மூன்று நோய்களும் உடலுக்குத் துன்பம் செய்யும் என்பதாகும்.

இதன் மூலம் வள்ளுவர் மூன்று முக்கிய நோய்களை கண்டறிந்துள்ளார் எனும் கருத்தும் உணவு மிகுதியும் குறைவும் நோயை ஏற்படுத்தும் என்பதும் புலப்படுகின்றது.

***"மருந்து என வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்"*** என்பது வள்ளுவரின் இரண்டாவது குறள்.

எவனொருவன் முன் உண்ட உணவு செரிந்த பின் அல்லது சமித்த பின் மீண்டும் உணவு உண்ணுகின்றானோ அவனுடைய உடம்பிற்கு மருந்து என்ற ஒன்று தேவைப்படுவதில்லை என்பது இதன் பொருள். எமது பண்டைய மக்கள் இரண்டு அல்லது மூன்று வேளைகளில் மாத்திரமே உணவை உட்கொண்டு வந்திருந்தனர். ஆனால் இன்றைய இளைய சமுதாயம் சற்றே இதிலிருந்து விலகி காணுகின்ற போதெல்லாம் உண்ணுகின்ற ஒரு வழக்கத்தை கைக்கொள்கின்றது என்பது புலப்படுகின்றது.

இந்தக் கருத்தையே மீண்டும் ஒரு முறை தெளிவுபடுத்த முனைகிறார் பொய்யாமொழியார்.

***"அற்றால் அளவு அறிந்து உண்க அஃதுடம்பு பெற்றான் நெடிது உய்க்கும் ஆறு"*** எனும் குறள் மூலம் முன் உண்ட உணவு செரித்த பின் வேண்டிய அளவு உண்பவன் பெற்ற உடம்பை நெடுங்காலம் பேணிப் பாதுகாப்பான் எனக் குறிப்படுகின்றார். அதாவது பசித்து உண்ணும் போதும் அளவு அறிந்து உண்க என்பது இதன் கருப்பொருள்.

பசித்த பின்பு தான் உணவை உண்ண வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திய தெய்வப் புலவர் மீண்டும் ஒரு முறை

***"அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறு அல்ல துய்க்க துவரப்பசித்து"*** என்ற குறள் மூலம் முன்கண்ட உணவு செரித்த பின் மாறுபாடில்லா உணவைக் கண்டறிந்து நன்றாக பசித்த பின்பு உண்ணவேண்டும் என்ற கருத்தையும் சொல்கின்றார்.

பொய்யாமொழிப் புலவர் தனது நான்காவது குறளாக மருந்து எனும் அதிகாரத்தில் பின்வரும் கருத்தைக் குறிப்பிடுகின்றார்.

***"மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து உண்ணின் ஊறுபாடு இல்லை உயிர்க்கு"***

அதாவது மாறுபடும் இல்லாத உணவை அளவோடு உண்டால் உயிர் உடம்பில் உறைவதற்கு ஊறு உண்டாகாது என்பதாகும்.

மாறுபாடு இல்லாத உணவு என்று வள்ளுவர் குறிப்பிடுவது வயதிற்கு ஏற்ற உணவாகவும் ஒருவருக்கு ஒத்துப் போகக் கூடிய அழற்சியையோ அல்லது ஒவ்வாமையையோ உண்டு பண்ணாத



உணவாக இருக்கலாம். இப்படியான உணவைத் தேர்ந்து எடுத்து உண்டால் உயிர் உடம்பில் நெடுநாள் தங்கும். இதனால் தான் மேலும் முனிவர்களும் ரிஷிகளும் நூற்றாண்டுகள் வாழ்ந்ததாக வரலாற்று குறிப்புக்கள் பறைசாற்றுகின்றன.

உணவின் அளவை மீண்டும் ஒரு முறை இடித்துரைக்க வந்த வள்ளுவர் இவ்வாறு தனது 5ஆவது குறளைப் படைத்தார்.

***"இழிவு அறிந்து உண்பான் கண் இன்பம் போல் நிற்கும் கழிபேரிரையான்கண் நோய்"***

குறைந்த அளவு உணவு உண்பவனிடம் இன்பம் நிலைத்து நிற்பது போன்று நிறைந்த அளவு உண்பவனிடம் நோய் நிலைத்து நிற்குமாம்.

***"போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து"*** எனும் மூத்தோர் வாக்கு உணவுப்பழக்கத்திற்குச் சாலவே பொருத்தமானது.

நோய் ஏற்பட்ட பின் சுவையான, இனிமையான உணவுகளை விட்டு ஒதுக்குவதிலும் பார்க்க நோய் வருமுன்னே அவற்றை அளவோடு சுவைப்பதும் அனுபவிப்பதும் புத்தி சாலித்தனமாகும்.

இறுதியாக ஒருவனுடைய பசி தான் உணவையும் அதன் அளவையும் தீர்மானிக்க வேண்டும் என்று வள்ளுவர் இயம்புகின்றார்.

***"தீயளவு அன்றி தெரியான் பெரிது உண்ணின் நோயளவு இன்றிப்படும்"***

அதாவது பசியின் அளவை அறிந்து உண்ணாமல், சுவை மிகுதியால் அதிகளவு உண்பவனுக்கு அளவில்லாத நோய்கள் உண்டாகும் என்பதாகும்.

ஒரு தோட்டத்தொழிலாளி நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்த பின் உண்ணுகின்ற சோற்றின் அளவும் ஒரு வங்கி உத்தியோகத்தர் ஒரு கதிரையில் உட்கார்ந்து வேலை செய்த பின் உண்ணும் சோற்றின் அளவும் ஒன்றாக இருக்க முடியுமா? சுவை என்ற ஒரு புலன் பசியென்ற ஓர் உணர்வை விட மேலோங்குவதனால் ஒருவர் தன்னை மறந்து அளவுக்கு அதிகமான உணவை உள்ளெடுக்க நேரிடுகின்றது. எனவே தான் பசிக்க உண்ணவேண்டும் பசிக்கு உண்ண வேண்டும்! என்ற கருத்தை தனது 7 ஆவது குறளில் முன் மொழிகின்றார் வள்ளுவப் பெருந்தகை.

இந்த முத்தான ஏழு குறள்களும் இரண்டாயிரம் ஆண்டுகள் கழிந்தும் எமக்கு மிக பொருத்தமானவையாகவே இருக்கின்றன.

வள்ளுவத்தின் வழி நின்று வாழ்வை வளப்படுத்த நாம் பகுத்துண்ண வேண்டும்! பசித்துண்ண வேண்டும்!

**பேராசிரியர் திருநாவுக்கரசு குமணன்,
பொது வைத்திய நிபுணர்.**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகர சபை வீதிகளுக்குப் பெயர் சூட்டுதல்

பின்வரும் வீதிகளை வர்த்தமானியின் பிரசுரித்து மாநகர சபைக்குரிய வீதிகளாக பதிவுசெய்யவுள்ளதால் இதற்கு பொதுமக்களின் கருத்தினை எதிர்பார்க்கின்றோம். மக்களின் கருத்தக்களை / அபிப்பிராயங்களை எதிர்வரும் 2023.07.10 ஆம் திகதிக்கு முன்னர் ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். வீதிகளின் இடஅமைவுகள் பற்றிய சந்தேகங்களை மாநக்ரசபையில் அறிந்துகொள்ளமுடியும்.

| தொ. இல | குறியீட்டு இலக்கம் | வீதியின் பெயர் | தொடக்கம் | முடிவு | வீதிக் கோட்டு நீளம்(அடி) | வீதியின் நீளம் (கி.மீ) | சராசரி அகலம் மீற்றர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 512 | ஆத்திசூடி வீதி உப ஒழுங்கை | ஆத்திசூடி வீதி | பலாலி வீதி 5ம் ஒழுங்கை | 15 | 0.205 | 2.4 |
| 2 | 335 | அரசடி வீதி இணைப்பு வீதி | அரசடி வீதி | ஆள்காட்டிவளவு ஒழுங்கை | 15 | 0.218 | 2.7 |
| 3 | 334 | புறாடி முன் ஒழுங்கை | கண்டி வீதி | கச்சேரி கிழக்கு ஒழுங்கை | 20 | 0.148 | 3.3 |
| 4 | 1037 | பிறவுண் வீதி முதலாம் ஒழுங்கை உப ஒழுங்கை | பிறவுண் வீதி 1ம் ஒழுங்கை | முடிவு | 10 | 0.17 | 2.7 |
| 5 | 1038 | பிறவுண் வீதி இரண்டாம் (A) ஒழுங்கை | பிறவுண் வீதி | முடிவு | 10 | 0.103 | 3 |
| 6 | 1039 | பிறவுண் வீதி உப ஒழுங்கை | பிறவுண் வீதி | முடிவு | 10 | 0.208 | 3 |
| 7 | 829 | இடுகாட்டு வீதி | கெனடி வீதி | முடிவு | 10 | 0.122 | 3 |
| 8 | 1040 | செட்டித்தெரு 1ம் உப ஒழுங்கை | செட்டித் தெரு | முடிவு | 15 | 0.309 | 2.9 |
| 9 | 1041 | செட்டித்தெரு 2ம் உப ஒழுங்கை | செட்டித் தெரு | முடிவு | 10 | 0.146 | 3.1 |
| 10 | 1042 | செட்டித்தெரு 3ம் உப ஒழுங்கை | செட்டித் தெரு | முடிவு | 10 | 0.13 | 2.8 |
| 11 | 1043 | செட்டித்தெரு 4ம் உப ஒழுங்கை | செட்டித் தெரு | முடிவு | 10 | 0.041 | 1.8 |
| 12 | 1044 | செட்டித்தெரு 5ம் உப ஒழுங்கை | செட்டித் தெரு | முடிவு | 10 | 0.121 | 2.6 |
| 13 | 1045 | செட்டித்தெரு 6ம் உப ஒழுங்கை | செட்டித் தெரு | முடிவு | 15 | 0.231 | 3.1 |
| 14 | 830 | தேவாலய ஒழுங்கை | காரைநகர் வீதி | முடிவு | 15 | 0.05 | 3 |
| 15 | 292 | கொழும்புத்துறை 1ம் 3ம் இணைப்பு வீதி | கொழும்புத்துறை வீதி 1ம் குறுக்கு | கொழும்புத்துறை 3ம் குறுக்கு | 15 | 0.21 | 2.7 |
| 16 | 293 | கொழும்புத்துறை 1ம் 4ம் இணைப்பு வீதி | கொழும்புத்துறை வீதி 1ம் குறுக்கு | கொழும்புத்துறை 4ம் குறுக்கு | 15 | 0.254 | 2.4 |
| 17 | 294 | கொழும்புத்துறை 3ம் 4ம் இணைப்பு வீதி | கொழும்புத்துறை வீதி 3ம் குறுக்கு | கொழும்புத்துறை 4ம் குறுக்கு | 15 | 0.075 | 2.4 |
| 18 | 336 | Dr. கணேசரட்ணம் வீதி | ஆனந்தன் வடலி வீதி | இலந்தைக்குளம் வீதி | 20 | 0.369 | 3.3 |
| 19 | 179 | ஈச்சமோட்டை வீதி-விதானையார் வீதி இணைப்பு வீதி | ஈச்சமோட்டை வீதி | விதானையார் வீதி | 15 | 0.195 | 2.6 |
| 20 | 176 | எழிலூர் 2ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 15 | 0.163 | 2.4 |
| 21 | 177 | எழிலூர் 3ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 15 | 0.196 | 2.7 |
| 22 | 513 | இந்து மகளிர் 1ம் உப ஒழுங்கை | பலாலி வீதி 5ம் ஒழுங்கை | முடிவு | 10 | 0.127 | 2.7 |
| 23 | 514 | இந்து மகளிர் 2ம் உப ஒழுங்கை | பலாலி வீதி 5ம் ஒழுங்கை | முடிவு | 10 | 0.066 | 2 |
| 24 | 9 | ஆஸ்பத்திரி வீதி | காரைநகர் வீதி | கண்டி வீதி | 50 | 3.07 | 6 |
| 25 | 940 | ஆஸ்பத்திரி வீதி உப ஒழுங்கை | ஆஸ்பத்திரி வீதி | முடிவு | 10 | 0.165 | 2.5 |
| 26 | 295 | இலந்தைக்குளம் பிள்ளையார் ஒழுங்கை | இலந்தைக்குளம் வீதி | விதானையார் வீதி | 20 | 0.097 | 3 |
| 27 | 331 | ஆத்திக்காடு வடக்கு ஒழுங்கை | சின்னாலங்கண்டு ஒழுங்கை | கேணியடி ஒழுங்கை | 20 | 0.52 | 3 |
| 28 | 813 | கலிபா அப்துல் காதர் வீதி | காரைநகர் வீதி | பொன்னாலை வீதி | 20 | 0.8 | 5 |
| 29 | 664 | கஸ்தூரிப்பிள்ளை ஒழுங்கை | காங்கேசன்துறை வீதி | கஸ்தூரியார் வீதி | 15 | 0.15 | 2.7 |
| 30 | 938 | கஸ்தூரியார் வீதி உப ஒழுங்கை | கஸ்தூரியார் வீதி | முடிவு | 13 | 0.11 | 3 |
| 31 | 831 | கெனடி ஒழுங்கை | புனித மரியாள் வீதி | முடிவு | 10 | 0.222 | 2.5 |
| 32 | 665 | கே.கே.எஸ் வீதி உப ஒழுங்கை | காங்கேசன்துறை வீதி | சீனியர் ஒழுங்கை | 15 | 0.15 | 2.7 |
| 33 | 666 | குமாரசாமி வீதி உப ஒழுங்கை | குமாரசாமி வீதி | முடிவு | 15 | 0.092 | 3 |
| 34 | 178 | எழிலூர் 4ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.112 | 2.4 |
| 35 | 296 | மாட்டின் உப ஒழுங்கை | மாட்டின் வீதி | முடிவு | 10 | 0.12 | 2.5 |
| 36 | 1046 | மருதடி வீதி 1ம் உப ஒழுங்கை | மருதடி வீதி | முடிவு | 10 | 0.13 | 2.1 |
| 37 | 1047 | மருதடி வீதி 2ம் உப ஒழுங்கை | மருதடி வீதி | முடிவு | 10 | 0.127 | 2.1 |
| 38 | 832 | முத்தமிழ் வீதி 4ம் ஒழுங்கை | காரைநகர் வீதி | முடிவு | 10 | 0.117 | 2.2 |
| 39 | 833 | முத்தமிழ் வீதி 5ம் ஒழுங்கை | காரைநகர் வீதி | முடிவு | 10 | 0.116 | 2.2 |
| 40 | 834 | முத்தமிழ் வீதி 6ம் ஒழுங்கை | காரைநகர் வீதி | முடிவு | 10 | 0.217 | 2.2 |
| 41 | 835 | முத்தமிழ் வீதி 7ம் ஒழுங்கை | காரைநகர் வீதி | முடிவு | 15 | 0.262 | 2.1 |
| 42 | 180 | மகேந்திரபுரம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 15 | 0.156 | 2.4 |
| 43 | 297 | நாகராஜா வீதி | புங்கங்குளம் வீதி | கொழும்புத்துறை வீதி | 15 | 0.367 | 2.2 |
| 44 | 1048 | நல்லூர் குறுக்கு உப ஒழுங்கை | நல்லூர் குறுக்குத் தெரு | முடிவு | 13 | 0.103 | 2.8 |
| 45 | 10 | நாவலர் வீதி | பொன்னாலை வீதி | கண்டி வீதி | 33 | 4.2 | 4.7 |
| 46 | 837 | நித்தியஒளி வீட்டுத்திட்ட வீதி | காரைநகர் வீதி | முடிவு | 10 | 0.285 | 3 |
| 47 | 121 | ஓடக்கரை ஒழுங்கை | அப்பன் வீதி 1ம் ஒழுங்கை | ஓடக்கரை வீதி | 15 | 0.428 | 2.4 |
| 48 | 667 | பழம் வீதி இணைப்பு வீதி | பலாலி வீதி | பழம் வீதி | 10 | 0.108 | 2.4 |
| 49 | 182 | துண்டி 1ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.042 | 2.1 |
| 50 | 183 | துண்டி 2ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.096 | 2.7 |
| 51 | 184 | துண்டி 3ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.124 | 2.4 |
| 52 | 429 | பருத்தித்துறை வீதி 5ம் ஒழுங்கை | பருத்தித்துறை வீதி | முடிவு | 12 | 0.08 | 3.4 |
| 53 | 936 | றக்கா வீதி உப ஒழுங்கை | றக்கா வீதி | முடிவு | 10 | 0.109 | 2.1 |
| 54 | 298 | சந்தனமாதா கோவில் உப ஒழுங்கை | கொழும்புத்துறை வீதி | முடிவு | 15 | 0.341 | 2.4 |
| 55 | 668 | சீனியர் ஒழுங்கை 1ம் உப ஒழுங்கை | சீனியர் ஒழுங்கை | முடிவு | 10 | 0.118 | 2.4 |
| 56 | 669 | சீனியர் ஒழுங்கை 2ம் உப ஒழுங்கை | சீனியர் ஒழுங்கை | முடிவு | 20 | 0.286 | 3 |
| 57 | 328 | சின்னாலங்கண்டு ஒழுங்கை | கண்டி வீதி | குகன் வீதி | 20 | 0.2 | 3 |
| 58 | 670 | சிவன் உப ஒழுங்கை | சிவன் வீதி | முடிவு | 10 | 0.126 | 3.3 |
| 59 | 671 | சிவப்பிரகாசம் வீதி உப ஒழுங்கை | சிவப்பிரகாசம் வீதி | முடிவு | 20 | 0.097 | 2.4 |
| 60 | 337 | சோமசுந்தரம் வழி உப ஒழுங்கை | சோமசுந்தரம் வழி | முடிவு | 10 | 0.222 | 2.4 |
| 61 | 841 | சூரியஒளி வீட்டுத்திட்ட வீதி | காரைநகர் வீதி | முடிவு | 15 | 0.3 | 2.5 |
| 62 | 937 | ஸ்ரான்லி வீதி உப ஒழுங்கை | ஸ்ரான்லி வீதி | முடிவு | 13 | 0.115 | 3 |
| 63 | 828 | தம்பிராசா ஒழுங்கை | காக்கைதீவு வீதி | ஆனைக்கோட்டை பழம் வீதி | 20 | 0.21 | 3 |
| 64 | 185 | துண்டி 4ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.096 | 2.4 |
| 65 | 186 | துண்டி 5ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.132 | 2.1 |
| 66 | 187 | துண்டி 6ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.116 | 3 |
| 67 | 188 | துண்டி 7ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.145 | 2.1 |
| 68 | 189 | துண்டி 8ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.132 | 2.4 |
| 69 | 194 | வளம்புரம் வீதி 5ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.171 | 2.7 |
| 70 | 195 | வளம்புரம் வீதி 6ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.112 | 2.7 |
| 71 | 291 | ஐயனார் வீதி உப ஒழுங்கை | ஐயனார் வீதி | முடிவு | 10 | 0.116 | 2.7 |
| 72 | 836 | முத்தமிழ் வீதி 8ம் ஒழுங்கை | காரைநகர் வீதி | முடிவு | 15 | 0.297 | 2.2 |
| 73 | 838 | பண்ணை மார்புச்சிகிச்சை 1ம் ஒழுங்கை | காரைநகர் வீதி | முடிவு | 15 | 0.193 | 2.7 |
| 74 | 181 | துண்டி வீதி | பழையபூங்கா வீதி | கொழும்புத்துறை வீதி | 25 | 2.244 | 5 |
| 75 | 299 | துரையப்பா ஒழுங்கை | விதானையார் வீதி | முடிவு | 10 | 0.192 | 2.5 |
| 76 | 939 | வைரவர்கோவில் ஒழுங்கை | ஆஸ்பத்திரி வீதி | சி.பொன்னம்பலம் வீதி | 25 | 0.1 | 8.3 |
| 77 | 190 | வளம்புரம் வீதி 1ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.327 | 2.7 |
| 78 | 191 | வளம்புரம் வீதி 2ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.216 | 2.7 |
| 79 | 192 | வளம்புரம் வீதி 3ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.22 | 2.4 |
| 80 | 193 | வளம்புரம் வீதி 4ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.236 | 2.4 |
| 81 | 839 | பண்ணை மார்புச்சிகிச்சை 2ம் ஒழுங்கை | காரைநகர் வீதி | முடிவு | 20 | 0.343 | 2.7 |
| 82 | 840 | பண்ணை மார்புச்சிகிச்சை 3ம் ஒழுங்கை | காரைநகர் வீதி | முடிவு | 15 | 0.191 | 2.7 |
| 83 | 300 | விதானையார் வீதி 1ம் ஒழுங்கை | விதானையார் வீதி | முடிவு | 10 | 0.181 | 2.7 |
| 84 | 2001 | விதானையார் ஒழுங்கை | கொழும்புத்துறை வீதி | புனித மரியாள் ஒழுங்கை | 10 | 0.21 | 2.4 |
| 85 | 1049 | வைமன் வீதி 1ம் ஒழுங்கை | வைமன் வீதி | முடிவு | 10 | 0.0976 | 3 |
| 86 | 1050 | வைமன் வீதி 2ம் ஒழுங்கை | வைமன் வீதி | முடிவு | 10 | 0.143 | 3.2 |
| 87 | 1051 | வைமன் வீதி 3ம் ஒழுங்கை | வைமன் வீதி | முடிவு | 13 | 0.094 | 3 |
| 88 | 1052 | வைமன் வீதி 4ம் ஒழுங்கை | வைமன் வீதி | முடிவு | 10 | 0.229 | 2.8 |
| 89 | 1053 | வைமன் வீதி 5ம் ஒழுங்கை | வைமன் வீதி | முடிவு | 10 | 0.13 | 2.6 |
| 90 | 1054 | வைமன் வீதி 6ம் ஒழுங்கை | வைமன் வீதி | முடிவு | 10 | 0.17 | 2.4 |
| 91 | 1055 | வைமன் வீதி 7ம் ஒழுங்கை | வைமன் வீதி | முடிவு | 13 | 0.087 | 3 |
| 92 | 1056 | வைமன் வீதி 8ம் ஒழுங்கை | வைமன் வீதி | முடிவு | 10 | 0.05 | 3.2 |

(C-6811)

இ.த.ஜெயசீலன், ஆணையாளர், யாழ்ப்பாணம் மாநகரசபை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒரு நாட்டுடன் மாத்திரம் இணைந்து இலங்கை செயற்படாது

## வெளிவிவகார அமைச்சர்



(கொழும்பு)

இலங்கை இந்தியாவின் நியபூர்வமான பாதுகாப்பு கரிசனைகளை கருத்தில் கொள்ளும் ஆனால் ஒரு நாட்டுடன் மாத்திரம் சேர்ந்து செயற்படாது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இலங்கை தனது நாட்டிற்கும் மக்களிற்கும் எது மிக சிறந்ததோ அதனை செய்யும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கேந்திர அமைவிடம் சர்வதேச வல்லரசுகளுடனான அதன் நெருங்கிய உறவுகள் பல வாய்ப்புகளை வழங்குகின்றன.

அனைவரும் இலங்கை மீது செல்வாக்கு செலுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்கள் ஆனால் நாங்கள் இந்த பாதையில் மிகவும் அவதானமாக பயணித்து இந்து சமுத்திரம் எப்போதும் அமைதிப்பிராந்தியமாக விளங்கும் நில்லையை ஏற்படுத்த வேண்டும் அனைவருக்கும் வாய்ப்புகளை ஏற்படுத்தவேண்டும் என அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

இந்தியா இலங்கையின் மிகப்பெரிய அயல்நாடு என்பதை இலங்கை எப்போதும் மனதில் வைத்திருக்கும் எனவும் தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் இந்தியா வெளிப்படுத்தும் எந்த நியாயபூர்வமான பாதுகாப்பு கரிசனைகளையும் இலங்கை கருத்தில்கொள்ளும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் நியாயபூர்வமான கரிசனைகள் என்பது சீனாவின் கப்பல்களை திருப்பி அனுப்புவதையும் உள்ளடக்கியதா என்ற கேள்விக்கு பதிலளிக்க விரும்பவில்லை என அலிசப்ரி தெரிவித்துள்ளார். (4)

# வேட்புமனுக்களை இரத்து செய்வது குறித்து ஆராய்ந்த பின் முடிவு

## இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்புமனுக்களை இரத்து செய்யும் யோசனை தொடர்பாக ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கலந்துரையாடி அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர தெரிவித்தார். உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் பாராளுமன்ற உறுப் பினர்களும் இது தொடர்பான யோசனைகளை முன்வைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான யோசனை பாராளுமன்ற தெரிவுக் குழுக்களினூடாக முன்வைக்கப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர தெரிவித்தார்.

பாராளுமன்ற விசேட கட்டளைகள் சட்டமூலத்தின் ஊடாகவே உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்புமனுக்களை இரத்து செய்ய முடியும் என இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். தமது பணிகளை முன்னெடுத்து செல்வதில் வேட்பாளர்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமத்தை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் கூறினார். (4)

# மாயமான வாகனங்கள் தொடர்பில் எந்த தகவலும் இல்லை

## தேசிய கண்காணிப்பு அலுவலகம்

(கொழும்பு)

தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையின் படி, 2022 ஆம் ஆண்டு இறுதி வரை ஜனாதிபதி செயலகத்துக்குச் சொந்தமான 51 வாகனங்கள் தொடர்பில் எந்த தகவலையும் கண்டுபிடிக்க முடியவில்லை என தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக இந்த வாகனங்களின் பெறுமதியையும் நிர்ணயிக்க முடியாதுள்ளது எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி அலுவலகத்திற்குச் சொந்தமான 53 வாகனங்கள், ஏனைய அரச நிறுவனங்கள், விகாரைகள், சமயத் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளன.

இவற்றில் 2022 ஆம் ஆண்டு 27 வாகனங்களுக்கான பராமரிப்புச் செலவிற்காக அலுவலகம் ஒரு கோடியே 37 இலட்சம் ரூபாவை செலவிட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளது. (4)

# லொறி மோதியதில் சகோதரர்கள் பலி

(கொழும்பு)

வீதி விபத்தில் சகோதரர்கள் இருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் அம்பாந்தோட்டை மாவட்டம், பெலியத்தை பிரதேசத்தில் நேற்று காலை 8 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

சந்தையில் மரக்கறி வாங்க வீதியில் நடந்து சென்ற சகோதரர்கள் இருவர் மீது பின்னால் வேகமாக வந்த லொறி மோதியதில் ஒருவர் சம்பவ இடத்திலும், மற்றையவர் வைத்திய சாலையிலும் உயிரிழந்துள்ளனர்.

லொறியின் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4)

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு வட்டி இல்லா கடன் வசதி

## பிரதமர் உறுதி



(கொழும்பு)

நிதி பிரச்சினையை முகாமைத்துவம் செய்துகொண்டு, அரச பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாத்திரமல்லாது, தனியார் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் வட்டியில்லா கடன் வசதியை பெற்றுக் கொடுக்க மிக விரைவில் நடவடிக்கை எடுப்போம். அது தொடர்பில் தற்போது கலந்துரையாடி வருகிறோம் என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவினால் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

பல்கலைக்கழக வாய்ப்பு கிடைக்கப்பெறும் மாணவர்களுக்கு பட்டம் வழங்கும் கல்வி நிறுவனங்களில் உயர் கல்வியை தொடருவதற்கான வட்டியில்லா கடன் வழங்கும் திட்டம் தொடர்பாக கல்வி அமைச்சர் இந்த சபைக்கு இதற்கு முன்னர் அறிவித்திருந்தார்.

அதேநேரம் கல்வி அமைச்சரால் அமைச்சரவைக்கு இது தொடர்பில் சமர்ப்பித்திருந்த அமைச்சரவை பத்திரத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கி இருந்தது.

அதன் பிரகாரம் தற்போது இது தொடர்பான நிதி ஒதுக்கீடு தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தை விரைவாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருகிறது என தெரிவித்தார். (4)

# மது விற்பனை குறைவால் வருமானம் இல்லை

## கலால் திணைக்களம்

(கொழும்பு)

விலை அதிகரிப்பு காரணமாக மதுபான உற்பத்தி மற்றும் விற்பனை குறைவடைந்துள்ளதாக கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆகவே இவ்வருடம் வரி வருமான இலக்குகளை தம்மால் அடைய முடியவில்லை என்றும் கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தலைமையில் தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதீக திட்டமிடல் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழு கூட்டத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இங்கு, கலால் திணைக்களத்தினால் இவ்வருடம் எதிர்பார்க்கப்பட்ட வருமானம் 217 பில்லியன் ரூபாய் எனவும், ஜூன் மாதம் வரை 72.985 பில்லியன் ரூபாய் மாத்திரமே வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினர்.

மதுபானத்தின் விலை அதிகரிப்பால் மது உற்பத்தி மற்றும் விற்பனை குறைந்துள்ளதாகவும் இதனால் எதிர்பார்த்த வருமானத்தை எட்ட முடியவில்லை என்றும் இங்கு வருகை தந்த அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். (4)

# 41 நாடுகளில் இருந்து 12 லட்சம் வேலைவாய்ப்புகள்

## அமைச்சர் மனுஷ



(கொழும்பு)

இலங்கைக்கு 41 நாடுகளிலிருந்து 12 இலட்சத்திற்கும் அதிகமான வேலை அனுமதிப்பத்திரங்கள் கிடைத்துள்ளதாக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இவ் வருடம் 3 இலட்சத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு திறன் மற்றும் மொழித்திறனை வளர்த்து இலங்கையர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும் வகையில் செயற்பட்டு வருகின்றதென அமைச்சர் மனுஷ நாணயக்கார மேலும் தெரிவித்தார். (4)

# தங்கத்தின் விலையில் மாற்றம்

(கொழும்பு)

உலக சந்தையில் நேற்று தங்கத்தின் விலை 6 டொலர்களால் அதிகரித்து ஒரு அவுன்ஸ் 1921 டொலர்களாக காணப்படுகிறது.

நேற்றுமுன்தினம் கொழும்பு செட்டியார் தெருவில் 24 கரட் தங்கம் ஒரு இலட்சத்து 61 ஆயிரம் ரூபாவாகவும் 22 கரட் தங்கம் ஒரு இலட்சத்து 49 ஆயிரம் ரூபாவாகவும் மாற்றமடைந்தன.

உலகளவில் ஏற்படும் பொருளாதார மந்த நிலை காரணமாக இவ்வாறு தங்கத்தின் விலை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கு எறும்புகளைப் போல உபதேசிப்பவர் யாருமில்லை. ஆனால் அந்த எறும்புகளோ பேசுவதில்லை. ~ ஃபிராங்க்லின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தென்பகுதியில் முளைவிட்டுள்ள துப்பாக்கிச் சூட்டு மரணங்கள்

பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகியுள்ள இலங்கை அதிலிருந்து மீண்டெழுமா? என்ற கேள்விக்கு இன்னமும் பதில் கிடைக்க வில்லை.

ஏதோ இடையிடையே பொருட்களின் விலைக்குறைப்பு மட்டுமே இப்போதைக்கு சிறு ஆறுதலைத் தருகிறது.

ஆயினும் விலைக் குறைப்பும் இன்னமும் முழுமையாக அமுலாகவில்லை என்பதை யும் இங்கு சுஹித்தானாக வேண்டும்.

பரவாயில்லை. இலங்கை ரூபாயின் பெறு மதி உயர்வடைவதான செய்திகளோடு ஓரளவு திருப்தியடையலாமென்றால், அதற்கும் கேடு விளைவிப்பதுபோல தென்பகுதியில் துப்பாக்கி யால் சுட்டுக் கொல்லப்படும் சம்பவங்கள் அமைகின்றன.

ஆம், இப்போது தென்பகுதியில் இனந் தெரியாத கொலைச் சம்பவங்கள் ஒவ்வொரு நாளும் இடம்பெற்ற வண்ணமுள்ளன.

யார் சுட்டுக் கொல்கிறார். யார் சுடப்படு கிறார்கள் என்பது தெரியாமலே துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடந்தாகின்றன.

அதேநேரம் இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்ப வம் தொடர்பில் பொலிஸாரோ அன்றி சிங் கள அரசியல்வாதிகளோ அதிகம் அலட்டிக் கொள்வதாகவும் தெரியவில்லை.

இங்குதான் தென்பகுதியில் இடம்பெறும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களின் பின்னணி தொடர்பில் பலத்த சந்தேகங்கள் எழுகின் றன.

ஆம், நாட்டில் விபத்து மரணங்கள், கோஷ் டிச் சண்டைகள் என்பன இடம்பெறுகின்றன வாயினும் துப்பாக்கிப் பிரயோகம் என்பது போருக்குப் பின்பாக இல்லாமல் இருந்தது.

எனினும் கோட்டா ஹோ கம என்ற கோசத் துடன் சுவிய மக்கள் எழுச்சி முடிவுற்று ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஜனாதிபதியாகப் பெறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னர், துப் பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தென்பகுதியில் முளைவிடலாயின.

இவ்வாறு தென்பகுதியில் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்படும் சம்பவங்கள் தொடர்பில் உரிய விளக்கம், விசாரணைகள் நடத்தப்பட்டு அதன்மூலம் அதனை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும்.

இல்லையேல் அதன் தொடர்ச்சி தமிழர் தாயகத்திலும் விஸ்தரிக்க வாய்ப்புண்டு.

தவிர, தென்பகுதியில் வாழுகின்ற தமிழர் களை நோக்கியும் இத்துப்பாக்கிகள் பிரயோ கிக்கப்படலாம்.

ஆகையால் தென்பகுதியில் இடம்பெறும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பில் நம் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் பிரஸ்தாபிப்பதுடன் குறித்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பில் பாதுகாப்புத் தரப்பு அமைதி காப்பதன் உள் ளார்ந்தம் என்ன என்பது குறித்து சிலாகிக்க வேண்டும்.

# உயர்கல்வி மாணவர்களுக்கு வட்டியில்லா கடனை வழங்குங்கள்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

உயர்கல்வி கற்கும் மாணவர்களுக்கு வழங் கப்படும் வட்டியில்லா கடன் களை மீளவும் வழங்கு மாறு எதிர்க்கட்சித் தலை வர் சஜித் பிரேமதாச கோரி க்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரை யாற்றிய போதே இந்த கோரிக்கையை முன்வைத் துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத் தினால் பல்கலைக்கழக அனுமதிபெறும் மாண வர்களுக்கு மேலதிக கல் விக்காக வட்டியில்லா கடன் களை வழங்கப்பட்ட போதி லும் 2021,2022 ஆம் வருட தொகுதி மாணவர்க ளுக்கு கடன் வழங்குவதற் குத் தேவையான வர்த்த மானி வெளியிடப்பட வில்லை.

2017 ஆம் ஆண்டு பட்டதாரி கற்கைகளை வழங்கும் ஆறு கல்வி நிறுவனங்களுக்கு 26 கற்கைகளுக்காக 8 இலட் சம் ரூபா வட்டியில்லா கடன் வழங்கப்பட்டதாக வும் ஆனால் 2021,2022 தொகுதி மாணவர்களுக்கு இந்தக்கடன் இன்னும் வழங்கப்படவில்லை என் றும் இதற்கு அமைச்ச ரவை அங்கீகாரம் கூட கிடைத்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அமைச்சரவையின் அங்கீகாரம் கூட கிடைக்கப் பெற்றிருக்கும் இவ்வேளை யில் இதுநடைமுறைப் படுத்தப்படாமை பிரச்சினை யாகும் என்றும் விதிமுறை களை தற்போது ஏற்படுத்த தாது 7ஆம்தொகுதிக்கு முன்னுரிமை கொடுத்து கடனை வழங்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் வேண்டுகோள் விடுத் துள்ளார். (ம-7)

## இலஞ்சம் பெற்ற அரச அதிகாரிகள் அதிரடிக்கைது

4 இலட்சம் ரூபாயை இலஞ்சமாக பெற்ற அவிசா வளை மாநகர சபையின் பதில் செயலாளரும், வரு வாய் பரிசோதகரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவிசாவளை பிரதேசத் தைச் சேர்ந்த நபர் ஒருவர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் இலஞ்ச ஊழல்விசாரணைஆணை க்குழுவின் விசாரணை அதிகாரிகளால் குறித்த இரு அதிகாரிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவிசாவளை பேருந்து நிலையை புதிய வர்த்தக கட் டத் தொகுதியில் வர்த்தக நிலையம் ஒன்றின் உரி மையை விரைவாக வழங் குவதற்காக இலஞ்சம் கோரப்பட்டுள்ளது.

அவிசாவளை மாநகர சபையினுள் இலஞ்சம் பெறும் போதே குறித்த இரு அதிகாரிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். முதற் கட்ட விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்கள் கொழும்பு நீதவான் நீதி மன்றில் ஆஜர்படுத்தப்ப டவுள்ளனர். (ம-7)

## பொலிஸ் பிடியிலிருந்து தப்பியவர் தற்கொலை

(காலி)

காலி கராபிட்டிய பிர தேசத்தில் உத்தரவை மீறிச் சென்ற முச்சக்கர வண்டி மீது பொலிஸார் அண்மையில் துப்பாக்கிச் சூடு நடத்தியிருந்தனர்.

அந்த முச்சக்கரவண் டியின் சாரதி நேற்றுக் காலை பியதிகம பகுதியில் உள்ள ஆலயமொன்றுக்கு அருகில் ரயிலில் பாய்ந்து தற்கொலை செய்து கொண் டதாக பொலிஸார் தெரிவித் தனர்.

காலியில் இருந்து மரு தானை நோக்கி பயணித்த ரயிலில் தலையை வைத்து அவர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

குறித்த நபர் சுமார் 31 வயதுடையவர் எனவும் ஹபுகல வக்வெல்ல பிரதே சத்தை சேர்ந்தவர் என வும் பொலிஸ் ஊடகப் பேச் சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித் துள்ளார். கடந்த 22ஆம் திகதி காலி கராபிட்டிய பிரதேசத்தில் துப்பாக்கிச் சூடு சம்பவம் ஒன்று பதி வாகியிருந்தது.

உத்தரவை மீறிச் சென்ற முச்சக்கர வண்டி மீது பொலி ஸார் துப்பாக்கிச் சூடு நடத் தியதாக பொலிஸார் தெரி வித்தனர். எவ்வாறாயினும் முச்சக்கரவண்டியில் இருந்த இருவர் அதிலிருந்து தப்பிச் சென்றிருந்தனர்.

அதன்போது தப்பிச் சென்ற முச்சக்கர வண்டி யின் சாரதியே நேற்றுத் தற்கொலை செய்து கொண் டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. (ம-7)

## ரயிலின் முன் பாய்ந்து இளைஞன் உயிர்மாய்ப்பு

(திருகோணமலை)

திருகோணமலை - கந்தளாய் பொலிஸ் பிரி வுக்குட்பட்ட பகுதியில் இளை ஞன் ஒருவர் ஓடும் ரயி லில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கந்தளாய் பியந்த மாவ த்தை பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய கயான் மது சங்க என்கின்ற இளை ஞனே இவ்வாறு உயிரிழந் துள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர்.

உயிரிழந்த நபர் கடித மொன்றை எழுதி விட்டு திருகோண மலையிலி ருந்து கொழும்பு நோக்கி பயணித்த இரவு நேர தபால் கடுகதி ரயிலில் பாய்ந்தே அவர் உயரிழந் துள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் கந்தளாய் வைத்தியசாலை யின் பிரேத அறையில் வைக் கப்பட்டுள்ளதுடன் சம்பவம் குறித்த மேலதிக விசாரணை களை கந்தளாய் பொலி ஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (ம-7)

### பிரதமர் பதவியிலிருந்து

## இராஜினாமா செய்ய அழுத்தம் கொடுக்கப்பட்டது

ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க தனது வீடும் நூலகமும் எரிக்கப்பட்ட மறுதினம் தன்னை பிரத மர் பதவியிலிருந்து வில குமாறு அழுத்தம் கொடுக் கப்பட்டதாக தெரிவித்துள் ளார்.

காலிமுகத்திடல் அரக லயவிற்கு பின்னர் ஏற்பட்ட ஆட்சிமாற்றம் தொடர்பான எதிர்பாராத நிகழ்வுகளில் ஒரு பகுதியாக தனது வீடு எரிக்கப்பட்ட மறுநாள் தன்னை பிரதமர் பதவியி லிருந்து விலகுமாறு அழுத் தங்கள் கொடுக்கப்பட்ட தாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித் துள்ளார்.

ஊடகமொன்றினால் தூண்டப்பட்டவர்களே தனது வீட்டிற்கு தீமூட்டினார்கள் எனவும் அவர் தெரிவித் துள்ளார்.

ஜனாதிபதியின் கரு த்தினால் அரகலய ஆர்ப் பாட்டக்காரர்கள் ஆட்சி மாற்றம் குறித்து மிகவும் தீவிரமாக காணப்பட்ட ஒரு தருணத்தில் பிரதமர் பத வியிலிருந்து விலகுமாறு ரணில் விக்கிரமசிங்க விற்கு அழுத்தம் கொடுத் தது யார் என்ற சர்ச்சை மூண்டுள்ளது.

அரசமைப்பிற்கு ஏற்ப சபாநாயகர் தலைமை பொறுப்பை ஏற்கவேண் டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டதாகவும் ஜனா திபதி தெரிவித்துள்ளார்.

லண்டனில் சர்வதேச ஜனநாயக சங்கத்தின் 40 வருடபூர்த்தியை குறிக்கும் விதத்தில் இடம்பெற்ற நிகழ் வில் ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார். (ம-7)

## இரு குழுக்களிடையே மோதல் தடுக்கச் சென்றவர் படுகொலை

(காலி)

காலி - படபொல - பட துவ பகுதியில் உள்ள உண வகம் ஒன்றில் இரு குழுக் களுக்கு இடையில் இடம் பெற்ற மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இந்த மோதல் இடம் பெற்றுள்ளதாகவும் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட தில் பலத்த காயமடைந்த நபர் பலப்பிட்டிய ஆதார வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்ட போது உயிரி ழந்துள்ளதாகவும் பொலி ஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் கொய்து டுவ பிரதேசத்தை சேர் ந்த 37 வயதான நபரே உயிரிழந்துள்ளார். இந்த நபர் கொலை வழக்கில் பிணையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் படதுவ பிர தேசத்தில் அமைந்துள்ள உணவகம்ஒன்றில்மேலும் மூவருடன் மது அருந்திக் கொண்டிருந்த போது, அரு கில் மது அருந்திக் கொண் டிருந்த மற்றுமொரு குழு வினருடன் மோதல் ஏற் பட்டுள்ளது. உயிரிழந்த நபர் மோதலை சமரசம் செய்ய தலையிட்ட நிலை யில் சம்பவத்தின் பின்னர் அவர் தொடர்ந்து மது அருந் திவிட்டு உணவகத்தில் தங்கியுள்ளார்.

இதன்போது தலைக்க வசம் அணிந்து கூரிய ஆயுதங்களை ஏந்திய இரு வர் இவரை உணவகத் தின் பின்புறம் உள்ள மாட்டு தொழுவத்திற்கு அழைத்துச் சென்று தாக் கியதாக தெரிவிக்கப்படு கிறது.

சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ள துடன், மேலும் ஒருவரை கைது செய்வதற்கான மேல திக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர்கள் கைது; மண்டபம் மீனவர்கள் பணிப்பகிஸ்கரிப்பு

(இராமநாதபுரம்)


எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி தமிழக மீனவர்கள் 22 பேரை கைது செய்த இலங்கை கடற்படையை கண்டித்து மண்டபம் மீனவர்கள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மீன்பிடி தடைக்காலம் நீங்கிய பின் தொழிலுக்குச் சென்ற முதல் வாரத்தில் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக, மீனவர்கள் சிறைபிடிக்கப்பட்ட சம்பவம் மீனவர்களிடையே கலக்கத்தை ஏற்படுத்தியது.

இந்நிலையில் இலங்கை கடற்படையின் கைது நடவடிக்கையை கண்டித்தும், மண்டபம் மீனவர்கள் 5 பேர் உட்பட 22 தமிழக மீனவர்களை படகுடன் உடனடியாக விடுவிக்க கோரி மண்டபம் கோயில் வாடி வடக்கு மற்றும் தெற்கு மீனவர்கள் நேற்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் இப்பகுதியில் 300இற்கும் மேற்பட்ட விசைபடகுகள் கரையில் நங்கூரமிட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. (4-6-104)

# மன்னாரில் இறந்த நிலையில் கரையொதுங்கிய கடற்பசு



(மன்னார்)

மன்னார் வளைகுடா கடற்கரையில் இறந்த நிலையில் கடற்பசு ஒன்று கடந்த வியாழக்கிழமை கரையொதுங்கியுள்ளது.


இராமநாதபுரம் - பாம்பனுக்கு அருகில் உள்ள தெற்கு மன்னார் வளைகுடா பகுதியிலுள்ள தோனித்துறை கடற்கரையில் இந்த கடற்பசு கரையொதுங்கியுள்ளது.

இது தொடர்பில் உடனடியாக இராமேஸ்வரம் வனவள திணைக்கள அதிகாரிகளுக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து, அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு சென்றிருந்தனர்.

உயிரிழந்த நிலையில் கரையொதுங்கிய இந்த கடற்பசு சுமார் 8 வயது மதிக்கத்தக்கது என்பதுடன், 1500 கிலோகிராம் எடை கொண்டதாக இருக்கலாம் என இராமேஸ்வர வனவள திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (4-6)

# தருமபுரம் பகுதியில் மாசடையும் கிணற்று நீர்

## மக்கள் அசௌகரியம்



(தருமபுரம்)

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிக்குட்பட்ட தருமபுரம் பகுதியில் உள்ள மக்கள் தமது பயன்பாட்டில் உள்ள கிணற்று நீர் மஞ்சள் காவி நிற தண்ணீராக மாற்றமடைந்துள்ளதால் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக தெரிவித்துள்ளனர்.

குறித்த பிரச்சினையால் குடிநீர் பெறுவதில், பாடசாலை மாணவர்களின் சீருடை துவைப்பது மற்றும் தமது அன்றாட தேவைகளுக்கு பயன்படுத்துவதில் பல இன்னல்களை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவித்தனர்.

கல்மடு குளத்தின் நீரில் இருந்தே தமது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்து கொண்ட நிலையில் திருத்த வேலை காரணமாக அந்நீரினையும் பெற முடியாமல் உள்ளது.

எனவே இவ் விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் அறிவித்துள்ளனர். (4-6-316)

# இம்முறையாவது எமக்கு உரிய தீர்வு கிடைக்குமா?

## உறவுகள் ஆதங்கம்

(மன்னார்)

ஒவ்வொரு ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத் தொடரின் போதும் எமக்கு உரிய தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இருப்போம். ஆனால் அந்த நம்பிக்கை அடுத்த நிமிடமே இல்லாது போகிறது. இம்முறையாவது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டும் என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்தார்.

மன்னாரில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது . கூட்டத் தொடரின் அமர்வு இடம்பெற்று வருகின்ற நிலையில், இலங்கையில் வடக்கு-கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாங்கள் 15 வருடங்களாக வீதியில் இறங்கி போராடி வரும் நிலையில், இதுவரை எமது பிரச்சினைகள் தீரவில்லை.

குறித்த அமர்விலாவது எமக்கு தீர்வு கிடைக்க வேண்டும். இன்னும் எவ்வளவு காலம் நாங்கள் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக வீதியில் நின்று போராடுவது? எமது உறவுகள் உயிரோடு இருந்தால் அவர்களை விடுதலை செய்யுமாறு நாங்கள் கேட்கிறோம்.

இல்லை என்றால் அவர்களுக்கு என்ன நடந்தது என்று கூறுங்கள். நாங்கள் நீதிக்காக போராடி வருகிறோமே தவிர நிதிக்காக போராடவில்லை என தெரிவித்தார். (4-6-285)



கிளிநொச்சியில் பெண்கள் வாழ்வுரிமை சங்கத்தினரால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான பயிற்சி பட்டறையில் கலந்து கொண்ட 50 பேருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

(படங்கள்: யதுபாஸ்கரன்)

# நிறுக்கும் கருவிகளுக்கு முத்திரையிடல்



(தருமபுரம்)

அளவீட்டு அலகுகள் திணைக்களத்தினால் பூநகரி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் நிறுவை அளவு கருவிகளுக்கு முத்திரை பதிக்கும் வேலைத்திட்டமானது இம்மாதம் 19 ஆம் திகதி தொடக்கம் நேற்று முன்தினம் வரை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, 12 மாத காலப் பகுதியில் முத்திரையிடாத பூநகரி பிரதேச செயலகத்தை சேர்ந்த 160 இற்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் தராசுகளுக்கு முத்திரையிட்டுக் கொண்டனர்.

வருடாவருடம் முத்திரையிடும் பணிகளை அளவீட்டு அலகுகள் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-6-316)

# சந்தைகளில் நேற்றைய விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 180 | 160 | 240 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 600 | 500 | 600 | 700 |
| தக்காளி | 280 | 300 | 250 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 240 | 240 | 250 |
| கோவா | 300 | 250 | 250 | 300 |
| கரட் | 250 | 400 | 420 | 450 |
| பூசணி | 100 | 100 | 100 | 100 |
| புடோல் | 150 | 140 | 180 | 250 |
| வாழைக்காய் | 100 | 170 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 350 | 360 | 420 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 130 | 140 | 140 |
| பாகற்காய் | 500 | 500 | 400 | 800 |
| வெண்டக்காய் | 300 | 320 | 120 | 320 |
| கருணைக் கிழங்கு | 160 | 200 | 200 | 200 |
| பயற்றங்காய் | 500 | 600 | 350 | 400 |
| லீக்ஸ் | 320 | 350 | 350 | 350 |
| பீற்றூட் | 420 | 350 | 200 | 400 |
| கறிமிளகாய் | 380 | 400 | 350 | 500 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 600 | 800 |
| போஞ்சி | 550 | 500 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | — | 600 |
| கீரை - 1 பிடி | 60 | 70 | 60 | 100 |
| தேசிக்காய் | 300 | 300 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 80 | 75 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 260 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 450 | 600 | 400 | 800 |
| முள்ளங்கி | 160 | 160 | 200 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 35 | 40 | 50 |
| ஈரப்பலா | 180 | 200 | — | 250 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்சாரம் தாக்கி...

ருந்த நிலையில், குறித்த பெண் தண்ணீர் இறைப்பதற்கு மோட்டாரை இயக்க முற்பட்டபோதே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

இதில் செந்தில்நாதன் செந்தமிழ்ச்செல்வி (வயது - 60) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,104)

## கனேடியப்...

வவுனியாவில் கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் கனடா பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி ஆகியோரின் உருவப் பொம்மைகள் எரிக்கப்பட்டு கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் தேசிய ஒற்றுமைக்கான இயக்கத்தின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் வவுனியா பழைய பேருந்து நிலையம் முன்பாக நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றது.

கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் கனடா பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்த சங்கரி ஆகியோரின் உருவப் பொம்மைகளுடன் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் பயங்கரவாதம் எங்களுக்கு வேண்டாம், ஜஸ்டின் ட்ரூடோ இதைக் கேள் உங்களுடைய சுதந்திரத்தினை எங்களுக்கு தா, படுகொலை எங்கே நடந்தது?

ஜஸ்டின் ட்ரூடோ உனக்கு தேவை பயங்கரவாதம் போன்ற கோசத்தினை எழுப்பியவாறும் இலங்கையின் இறையாண்மைக்கு கைகொடுங்கள், கனடா இனவாதத்தை பற்ற வைக்காதீர்கள் அது குற்றம் போன்ற பல்வேறு பதாதைகளை தாங்கியவாறும் போராட்டம் நடைபெற்றிருந்தது.

இறுதியில் கன்டா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் கனடா பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்த சங்கரி ஆகியோரின் உருவ பொம்மைகளுடன் வீதியில் போடப்பட்டு எரிக்கப்பட்டன.

இவ் போராட்டத்தில் தமிழ், முஸ்லிம், சிங்கள இனத்தினை சேர்ந்த 30க்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர். (ம-7)

## மன்னாரில்...

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது மீனோர் சந்தியில் எதிர்திசையில் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி மயக்கம் அடைந்த நிலையில் எருக்கலம்பிட்டி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக நேற்று சனிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் அதிகாலை 3 மணியளவில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## பிரான்ஸ்...

முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது இரு நாட்டு தலைவர்களும் சுமுகமான கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர்.

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனின் அழைப்பின்பேரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த மாநாட்டில் கலந்துகொண்டுள்ளார்.

அத்தோடு ஐ.நா.செயலாளர் நாயகம், அமெரிக்க திறைசேரி செயலாளர், பொதுநலவாய நாடுகளின் செயலாளர் உள்ளிட்ட பல்வேறு முக்கிய இராஜதந்திரிகளையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கண்ணகி...

சித்தாமிர்தயோகமும் கூடிய காலை 9.37 முதல் 11.00 மணிவரையான சுப வேளைதனிலே வேத திருமுறை பாராயணங்களும் மக்கள் வாத்தியங்களும் முழங்க பக்திபூர்வமாக கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது. (ம-7)

## யாழ்.பல்கலைக்...

கழக மாணவர் ஒன்றியம் பலமான தொரு திரளாக எழுவதற்கும் தமிழ் மக்களின் உரிமைக்கான பயணத்தில் தவிர்க்க முடியாத குரலாக ஒலிப்பதற்கும், பல்கலைக்கழக அறிவுசார் பலமான பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களான உங்கள் அனைவரதும் நேரடியான மற்றும் மறைமுகமான பங்களிப்புக்களும் ஆதரவுகளுமே காரணமாகும்.

இருப்பினும் சில விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தவும் அறியத் தருவதற்குமானதொரு சூழல் தற்போது எழுந்திருக்கின்றமையால் அதனை இந்தக் கடிதம் வாயிலாக அறியத்தருகின்றோம்.

1. தமிழ் மக்களின் கூட்டு உணர்வுகளோடு தொடர்புடைய தினங்களில் களியாட்டங்கள் மற்றும் கொண்டாட்டங்களிற்கு ஒப்புதல் வழங்குவதனையும் அவற்றினை முன்னெடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்வதனையும் தவிர்க்குமாறும், அன்றைய தினங்களில் பல்கலைக்கழக நாட்காட்டியில் நிகழ்வுகள் இடம்பெறாமையை உறுதி செய்யுமாறும் வேண்டிக் கொள்கிறோம்.

அண்மையில்கூட தமிழ் மக்களின் உணர்வுகளைப் உதாசீனப்படுத்தி அவமதிக்கும் விதத்தில் நிகழ்வொன்று இராணுவப் பிரசன்னத்தோடு இடம் பெற்றிருந்தது, அது தமிழ் மக்களின் ஆறாத மனங்களை மேலும் புண்படுத்தியிருந்ததோடு, பலத்த விமர்சனத்திற்கு உள்ளாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

2.யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் திட்டமிட்டு இடம்பெறும் மறைமுகமான சிங்கள மயமாக்கல் முயற்சிகளால் தமிழ் மாணவர்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படாமையை உறுதி செய்யுமாறு வேண்டுகின்றோம்.

பல்கலைக்கழக நுழைவு என்னும் எந்தப் புள்ளியில் இனப்பிரச்சினை ஆரம்பமாகியதோ அதே புள்ளியில் மீண்டும் வந்து நிற்கின்றோமா? என்று எண்ணத் தோணுகின்றது. தமிழ் மக்களின் உரிமைப் பயணத்தில் பலமான குரலாக ஒலித்துக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் குரலை நசுக்கும் விதமாக பெரும்பான்மையின மாணவர்கள் திட்டமிட்ட வகையில் உள்நுழைக்கப்பட்டு வருகின்றார்கள் என்பது யாவரும் அறிந்ததே.

இவ்வாறான தொரு சூழலில் அவர்கள் பெரும்பான்மையினைக் கைப்பற்றுவதன் ஊடாகதமிழ்மாணவர்களுக்குரிய தலைமைத்துவ வாய்ப்புக்கள் யாவும் ஜனநாயகம் என்ற போர்வையில் பறிக்கப்படுவதற்கான சூழல் எழுந்துள்ளது. இதனால் இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ் மாணவர்களுக்கென்றிருக்கும் இறுதியான ஒரேயொரு வாய்ப்பாகவிருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் இழக்கப்படும் சூழல் திட்டமிட்டு உருவாக்கப்பட்டு வருகின்றது.

தாயகத்தில் இடம்பெறும் பௌத்த சிங்கள மயமாக்கலுக்கு எதிராக யாழ் பல்கலைச் சமூகம் போராடி வருகையில், எமது விரிவுரையாளர்களே பல்கலையினுள் சிங்கள மயமாக்கலை முன்னெடுக்கும் சூழல் உருவாகுமேயானால் அது ஒரு முரணான செயலாகும்.

"யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலேயே எமக்கு அநீதி இழைக்கப்படுகிறது, எவரேனும் நீதி தாருங்கள்" என்னும் கையறு நிலைக்கு எமது தமிழ் மாணவர்களை தள்ளிவிட வேண்டாம் என்றும், இவை பொதுவெளியில் மக்கள் மன்றத்திற்குச் செல்ல முன்னர் அவ்வாறான தமிழர் விரோத முயற்சிகளை. தடுத்து நிறுத்துமாறும் வேண்டிக் கொள்கிறோம் என்றுள்ளது. (ம-7,33,104)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 24/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1610
வெற்றி இலக்கங்கள்
சிம்மம் 0 5 5 8 8 7
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.06.24
சீட்டிழுப்பு இலக்கம் - 1185
V 27 39 63 79
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.06.24
சீட்டிழுப்பு இலக்கம் 3397
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Q 01 54 67 75
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 24/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1503
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
S 11 19 21 38 66

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.06.24
சீட்டிழுப்பு இலக்கம் 464
வெற்றி இலக்கங்கள்
மீனம் 19 20 23 32 மீனம்

மஹஜன சம்பத
திகதி 2023/06/24
சீட்டிழுப்பு இலக்கம் 5155
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
N 1 8 7 5 7 1
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2129 நிறம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.06.24 தினம் சனிக்கிழமை
K 02 65 68 72
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,894,220/-
DLB

சனிதா
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.06.24
வெற்றி வாரம்: 4290
வர்ணம்: இளம் பச்சை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 30,647,658.00
வெற்றி இலக்கங்கள்
03 27 36 74 C
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/-
திகதி 2023-06-24
வெற்றி வாரம் 3841
வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள் மிதுனம்
15 22 25 60
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,966,840/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
R 40 07 08 29 62
சுப்பர் இலக்கம்
1305
சிவப்பு
2023.06.24
சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 340,527,083.40
DLB

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 605 திகதி 2023-06-24 வர்ணம் ஆரஞ்சு நிறம்
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 09 18 51 விதி எண் 07
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 21,104,836.00
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 1955
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி : 2023.06.24
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 53,387,441.40
வெற்றி இலக்கங்கள்
45 48 61 77 H
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...



கட்டணம் - 2800/=

(16033)

T.P:077 544 8503

## சிறுநீரகம் தேவை

O+ குருதி வகையைச் சேர்ந்த 34 வயதுடைய பெண் ஒருவருக்கு உடனடியாக சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ள இருப்பதனால் தானம் செய்ய விரும்புபவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

(16049)

074 006 0077

## காணி விற்பனைக்கு

ஆறுகால்மடத்தில்
2 பரப்பு காணி
விற்பனைக்கு உண்டு.

(16088)

074 271 0246
076 306 6719

## பணவீக்கம் குறைவடைந்தது

(கொழும்பு)

இலங்கையில் தற்போது பணவீக்க வீதம் குறைவடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடுகையில், மே மாதம் பணவீக்க வீதம் குறைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, மே மாதம் நாட்டின் பணவீக்கமானது 21.1 வீதமாக பதிவாகியுள்ளது.

அதேசமயம், கடந்த ஏப்ரல் மாதம் நாட்டின் பணவீக்கமானது 33.6 வீதமாக காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## உடனடி வேலைவாய்ப்பு

சமையல் உதவியாளர்கள்

வல்வெட்டித்துறையில் இயங்கும் உணவகத்திற்கு தங்கியிருந்து சமையல் செய்யக்கூடியவர்கள் தேவை.

WE ARE HIRING!

- முன்அனுபவம் விரும்பத்தக்கது.
- ஆர்வம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.



சம்பளம்: 50,000

(C-6814)

49A, CHAPEL STREET, JAFFNA

CIMS 777-068-777

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்

- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6814)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777
v2vacancies@gmail.com

## தேவை

எமது சிறுவர் இல்லத்திற்கு
செஞ்சோலை சிறுவர் இல்லம் (கிளிநொச்சி)

01.பராமரிப்பாளர்
02.முகாமையாளர்
03.சாரதி (Bus,Auto ஓட்டுனர்கள்)

உடன் தொடர்பு கொள்ளவும் !!!

(16074)

071 535 4500

## Personal Group Class

இரசாயனவியல் A/L 2020, 2021, 2022 , Repeat Batch
கடந்த கால Past Papers கற்பிக்கப்படும்.

சி. அங்கதன் B.Sc (Chem.Spl)

(16079)

077 078 1451

## சுவீடன் (SWIDEN-EU) சட்ட புலம்பெயர்வு

சட்டரீதியாக நீங்கள் குடும்பத்துடன் சுவீடன் (SWIDEN-EU) நாட்டிற்கு புலம் பெயர முடியும். உங்கள் விபரங்களை நேர் காணலிற்காக கீழ் காணும் மின் அஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளவும்.

(16084)

ashokavatika@gmail.com

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

(15768)

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

T.P : 077 780 3970, 074 007 1970

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் நிலப்பரப்பு 1 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.ஆர்வம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

(16086)

074 254 3759

## மணமகள் தேவை

உத்தர நட்சத்திரம் பாவம்-51 அரச நியமனம் பெற்ற பட்டதாரி மணமகனுக்கு மணமகள் தேவை. 6ம் இடத்தில் சூரியன் செவ்வாய் உள்ளது. மணமகளுக்கு அரச உத்தியோகம் கட்டாயம் இல்லை.

(16083)

077 327 6432

## ST. ANTONY`S COMPUTER

வட மாகாண முன்னணி கணினி விற்பனையாளர்



சகலவிதமான மடிக்கணினி (Laptop), மேசைக்கணினி (Desktop) எம்மால் மிக விரைவில் திருத்திக் கொடுக்கப்படும். மேலும் தரம் மிக்க கண்காணிப்பு கமரா (CCTV) எம்மால் பூட்டிக் கொடுக்கப்படும்.

(C-6809)

189, K.K.S. Road, Jaffna. 021 222 4865 / 077 063 3408

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378, 076 097 3127

## SB Travels and Tours Pvt Ltd (IATA AGENT)

சகல நாடுகளிற்கான நேரடி விமான பயணச் சீட்டுக்கள் Travels itinerary, Insurance, India, malasiya, Dubai, Bangkok விசாக்களும் மற்றும் பல நாடுகளுக்குமான E-Visaகளும் பெற்றுத்தரப்படும். ஐரோப்பிய நாடுகளிற்கான visa form பூர்த்தி செய்தும் தரப்படும். Appointment எடுத்துத்தரப்படும்.

**தற்போது Colombo to Chennai to Colombo 59,800/=**
**(Special fare offers for Canada, U.K, Paris, Doha, Dubai, Malasiya)**

**Hotline : 075 555 9932**

No.198, Kasthuriyar Road, Jaffna. 021 222 8555, 076 691 1082, 83
No41, Ginthupitiya street, Colombo - 13
011 233 3322, 076 691 1089
No.324, Aluthmawatha Road, Colombo -15
011 254 0280, 077 108 3481

(C-6812)

Email : sbtravels99@yahoo.com (நிபந்தனைக்குட்பட்டது)

## காணி தேவை

யாழ் K.K.S தெல்லிப்பளை, கீரிமலை, பலாலியில் (100-150) பரப்பு காணி உடன் தேவை.

(16087)

077 723 2535

## வீடு வாடகைக்கு

NO : 3, 42 வது லேன் வெள்ளவத்தையிலுள்ள இரண்டு அறைகள்,குசினி, இரண்டு Bathroom களுடன் கூடிய அடுக்குமாடி வீடு நாள், கிழமை, மாத வாடகைக்குண்டு

(16061)

075 278 6033

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 24 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- புத்தூர் தண்ணீர் தாங்கி அருகாமை(நிலப்பரப்பு)
- மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- வியாபார நிலையங்கள், திருமண மண்டபங்கள், வீடு அமைப்பதற்கு உகந்த இடம்
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.
- பார்வையிடும் நேரம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
- நன்னீர் ஊற்று.

(16076)

076 733 6047
076 755 8606
076 911 93[illegible]

## பணிப்பெண் தேவை

யாழ்.நகரிலுள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து பணிபுரிவதற்கு பணிப்பெண் தேவை.

(16085)

077 262 6944
077 327 6502

## பற்சிகிச்சை

நிரந்தர பல்கட்டுதல் (implant), கிளிப் போடுதல் மற்றும் அனைத்து நவீன சிகிச்சைகளும்

**கம்சியா**
**பற்சிகிச்சைப் பிரிவில்**

(யாழ்.ஆஸ்பத்திரிக்கு முன்பாக. BOC வங்கிக்கு அருகில்) நடைபெறுகிறது.

**578/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

(C-6712)

077 375 4490
077 220 2769

## வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியம்

NPTA

**வருடாந்த பொதுக்கூட்டம் (AGM) 2023**

**திகதி/ நேரம் - 26.06.2023 / 6pm**
**இடம் - TILKO CITY HOTEL JAFFNA**
**நுழைவு - ரூபா 3000/=**
(இரவு போசனம் உட்பட)
**அங்கத்துவம் - சுற்றுலாத்துறை வர்த்தக உரிமையாளர்கள்**

அங்கத்தவர்களுக்கு பிரத்தியேகமாக அரச, தனியார், வங்கி கடன்கள் முதலீடுகள் மேலும் பல சேவைகள் பெற்றுத்தருவதற்கான ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன.
யாழ்ப்பாண விமான நிலையம் காங்கேசந்துறைமுகம் ஆகியவற்றில் எமது முகவர் நிலையங்களை அமைப்பதற்கான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
தேவையின் அடிப்படையில் நிகழ்விற்கு வருபவர்களுக்கு யாழ் நகரில் இலவச தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

(C-6802)

021 222 4550
077 730 4545

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.